REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 செப்டெம்பர் 14 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
92

வரு. 92 இல. 220 | Saturday 14, September, 2024 | 12 பக்கங்கள் | 50/-

## பரீட்சையின்போது இடையூறுகள் ஏற்படாதிருக்க விசேட ஏற்பாடு

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை நாளை 15ஆம் திகதி நடைபெறவுள்ளதால், அன்றைய தினம் அவசர அனர்த்த சூழல் ஏற்படுமாயின் மாணவர்களை இடையூறின்றி பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான விசேட வேலைத்திட்டம் 06

### ரூ. 3,000 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட

## வடக்குக்கான ரயில் சேவை இன்று முதல் வழமைக்கு

### புனரமைக்கப்பட்ட பாதை திணைக்களத்திடம் கையளிப்பு



நாட்டில் வழமையான மற்றும் வினைத்திறன்மிக்க போக்குவரத்து சேவையை நிறுவும் நோக்கில், 3,000 கோடி ரூபா (92 மில்லியன் அமெரிக்க டொலர்) செலவில் புனரமைக்கப்பட்ட அநுராதபுரம் மஹவ ரயில் பாதை, நேற்று முன்தினம் (12) ரயில்வே திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் கடன் திட்டத்தின் கீழ், நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்கு ரயில்வேயின் புனரமைப்பு பணிகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டதோடு, அநுராதபுரம் ஓமந்தை, அநுராதபுரம் மிஹிந்தலை மற்றும் அநுராதபுரம் மஹவ என அபிவிருத்தி செய்யப்பட்டதாகவும் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள அநுராதபுரம் மஹவ பகுதியை கையளித்துள்ளதாகவும் திட்டப்பணிப்பாளர் 06

## பங்களாதேஷில் அமைதியின்மை 219 தொழிற்சாலைகளுக்கு பூட்டு

### இன்றைக்குள் தீர்க்காவிடில் பெரும் நெருக்கடி

11 ஆம் பக்கம் பார்க்க

## 100 ஆண்டுகள் பழமையான மருத்துவ கட்டளைச் சட்டம் புதுப்பிக்கப்படும்



### இன்றைய பங்களாதேஷின் நிலைக்கு இலங்கை செல்வதை நான் தடுத்தேன் - மருத்துவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாட்டின் அரச அதிகாரத்தில் வெற்றிடம் ஏற்பட இடமளிப்பது பாரிய துயரத்துக்கு வழிவகுக்குமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரச அதிகாரம் ஒரு தரப்பிடமிருந்து மற்றுமொரு தரப்பினருக்கு சுமுகமாக மாற்றப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இன்று பங்களாதேஷுக்குள் அவ்வாறான நிலையே ஏற்பட்டிருப்பதாகவும் அந்த நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு 06



## வாகன இறக்குமதி தடை நீக்கம்

### ஒக்டோபர் 01 முதல் அமுல்

வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிகத் தடையை நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மீட்சி செயல்முறைக்கு அமையவும் நிதி அமைச்சின் பரிந்துரைகளுடனும் இத்தடை நீக்கம் 2024 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் பல்வேறு கட்டங்களாக செயற்படுத்தப்படவுள்ளது. அதன்படி, 304 HS குறியீடின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரம் சாரா வாகன உதிரி பாகங்களை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம் மூன்று கட்டங்களில் செய்யப்படும்.

முதற்கட்டமாக, பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்க வாகனங்கள் மற்றும் பிற இயந்திரம் சாரா வாகன உதிரிப் பாகங்களின் இறக்குமதிக்கு 2024 ஒக்டோபர் 01 முதல் அனுமதி வழங்கப்படும்.

இரண்டாம் கட்டமாக வணிக அல்லது சரக்கு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு 2024 டிசம்பர் 01 ஆம் திகதி முதல் அனுமதி வழங்கப்படும்.

மூன்றாவது கட்டமாக தனியார் பயன்பாட்டுக்கான வாகனங்கள் (கார்கள், வேன்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் போன்றவை உட்பட) இறக்குமதிக்கு 2025 பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் அனுமதி வழங்கப்படும். வாகன இறக்குமதி முக்கிய வருமான ஆதாரமாக உள்ளதனால், புதிய வாகன இறக்குமதியை அனுமதிப்பதனூடாக பொருளாதாரத்தை 06

### வரி செலுத்துவோருக்கு நிவாரணம் வழங்கும் அரசின் வேலைத் திட்டம்

## தனிநபர் வருமான வரியை குறைக்க தீர்மானம்




### உழைக்கும் போது செலுத்தும் வரியை குறைக்கும் பிரேரணை வரவு – செலவு திட்டத்தில் உள்ளடக்க அமைச்சரவை அனுமதி

வரி செலுத்துவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ், 2025 ஏப்ரல் மாதம் முதல் தனிநபர் வருமான வரி (PIT) கட்டமைப்பில் திருத்தங்களைச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிச் சீர்திருத்தங்களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் அதேவேளையில், நிதிப் பொறுப்பைப் பேணுவதே இந்த வரி கட்டமைப்பு மாற்றங்களின் நோக்கமாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) கலந்துரையாடலைத் தொடர்ந்து, தனிநபர் வருமான வரிக் கட்டமைப்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், அமைச்சரவைப் பத்திரம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி சீர்திருத்தங்கள், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில், அரச 06

### MILCO நாளாந்த உற்பத்தி அதிகரிப்பு

## பால் மா கொள்வனவுக்கு அரசு ரூ. 200 மில். ஒதுக்கீடு

### 02 இலட்சம் மெ.தொ. கையிருப்பில்

அரசாங்கத்துக்கு சொந்தமான மில்கோ நிறுவனத்தின் நாளாந்த உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள 200,000 மெற்றிக் தொன் பால்மாவை கொள்வனவு செய்வதற்கு, 200 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாக விவசாய மற்றும் 06

### பெருந்தோட்டத் தொழிலாளர்கள்

## எல்லையற்ற வருமானத்தை பெறும் வகையில் சம்பள உயர்வு

### தொழில் அமைச்சு வர்த்தமானி வெளியீடு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் 1,350 ரூபாவாகவும், பறிக்கும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கு 50 ரூபா மேலதிகமாக செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு புதிய வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ.விமலவீரவின் 06



## கட்சியை நம்பிய தமிழ் மக்களுக்கு தமிழரசு கட்சி கொடுத்த ஏமாற்றம்

### யாரை ஆதரிப்பது என்பதிலும் குழப்பம்



தமிழரசுக் கட்சியின் மீது நம்பிக்கைவைத்திருந்த மக்களுக்கு தமிழரசு கட்சியினர் ஏமாற்றத்தையே வழங்கியிருப்பதாகவும் அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையில்லாத பல்வேறு குழப்ப நிலைக்கு சென்றுள்ளதாகவும் தெரிவித்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இதனாலேயே ஜனாதிபதியை ஆதரிப்பது தொடர்பாக பல்வேறு குழப்பங்கள் 06

03

**க.பொ.த. உயர் தரப் பரீட்சை நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பம்**

**டிசம்பர் 20ஆம் திகதி நிறைவு**



06

**BASL-JICA பிரச்சினை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் இராஜினாமா**



03

**வாக்களிப்பு நிலையங்களுக்கு கையடக்கத் தொலைபேசி எடுத்துச் செல்வது தடை**

### நான் ஆட்சிக்கு வந்தால்....!

## நாட்டில் செல்வந்தர்கள் அதிக வரி செலுத்தும் நிலை ஏற்படும்

### IMF உடன் மீண்டும் பேச்சு நடத்துவோம்



தான் ஆட்சிக்கு வந்தால், செல்வந்தர்கள் அதிக வரி செலுத்துவதையும், வறியவர்கள் தங்கள் நிலைமைகள் மேம்படுவதையும் உறுதிசெய்யும் வகையில், சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் 06

### இன்னும் பத்து வருடங்களில்

## ஆசியாவின் அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கை மாற்றமடையும்



இலங்கையை இன்னும் பத்து வருடங்களில் ஆசியாவின் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவோமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

களுத்துறை அகலவத்தையில் நடைபெற்ற தேர்தல் பிரசார பேரணியில் உரையாற்றும் 06

### குடிவரவு கட்டுப்பாட்டாளர்

## ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



அரசாங்கத்தினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஈ விசா நடைமுறையை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால தடை உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ்சாட்டி, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு உயர் நீதிமன்றம் நேற்று (13) உத்தரவிட்டுள்ளது. 06

### தேர்தல் புறக்கணிப்பு பிரசாரம்

## செல்வராசா கஜேந்திரன் எம்.பி கைதுசெய்யப்பட்டு விடுதலை



ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு மக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தலைப் புறக்கணிக்குமாறு வடக்கு – கிழக்கு மாகாண மக்களுக்கு அறிவிக்கும் வகையில், தமிழ்த் தேசிய மக்கள் கூட்டமைப்பு அண்மையில் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. இவ்வாறு நேற்று (13) கிளிநொச்சியில் பிரசாரத்தில் 06

### அராஜக முறையில் ஆட்சியை கைப்பற்ற முனையும் தே.ம.ச

# தவறியேனும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் நாடு வீழ்ச்சியடைவதுடன் டொலரின் பெறுமதி 500 ரூபாவை தாண்டுவதை தடுக்க முடியாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய மக்கள் சக்தி (திசைகாட்டி) குரோதத்தின் போர்வையிலேயே ஆட்சியைப் பிடிக்க செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு அவர்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் நாடு வீழ்ச்சியடைவதுடன் டொலரின் பெறுமதி 500 ரூபாவாக அதிகரிப்பதை தவிர்க்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் பதவியை தாம் எவரிடமிருந்தும் அபகரிக்கவில்லையென தெரிவித்த ஜனாதிபதி, எவரும் அதை பொறுப்பேற்காதபோது நாடு மற்றும் நாட்டு மக்களின் எதிர்காலம் தொடர்பாக சிந்தித்தே தாம் அந்தப் பதவியை பொறுப்பேற்றதாகவும் தெரிவித்தார்.



மேலும், அநுரகுமார திசாநாயக்கவுடன் விவாதத்துக்குச் செல்ல தான் தயாரென குறிப்பிட்ட ஜனாதிபதி, அவர்கள் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள பொருளாதார கொள்கை தொடர்பாக தெளிவாக விளக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், இம்முறை ஜனாதிபதி தேர்தலில், சஜித் பிரேமதாசவுக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கும் அளிக்கப்படும் வாக்குகள் அநுரகுமார திசாநாயக்கவுக்கு அளிக்கப்படும் வாக்குகளே என்பதை நாட்டு மக்கள் உணர வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

கெஸ்பேவ நகரில் நேற்று (12) நடைபெற்ற, "இயலும் ஸ்ரீலங்கா" மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த ஜனாதிபதி, மேலும் தெரிவிக்கையில்,

நாடு நெருக்கடியான சவால் மிக்க சூழ்நிலையை எதிர்கொண்டபோது, எவரும் நாட்டைப் பொறுப்பேற்காத போது, தனி ஒருவனாக நாட்டைப் பாதுகாத்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிவகுத்தேன்.

நாடு பொருளாதாரத்தில் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகின்றது. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் 20 மற்றும் 30 வீதமாக குறைவடைந்துள்ளது. சமுர்த்திக்குப் பதிலாக அஸ்வெசும கொடுப்பனவு மூன்று மடங்காக அதிகரித்து மக்களுக்கு வழங்கப்படுகிறது.

இவற்றின் மூலம் மக்களின் வாழ்வாதார சுமை முழுமையாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நான் குறிப்பிடவில்லை. மக்கள் மேலும் சுமைகளுடனையே வாழ்கின்றனர் என்பதை நான் உணர்கிறேன்.

நாடு ஓரளவு இயல்பு நிலைக்கு கட்டியெழுப்பப்பட்டுள்ளதனால் இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றி ரூபாவின் பெறுமதியையும் பலப்படுத்தி மக்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எம்மிடம் நாட்டின் எதிர்காலம் மற்றும் மக்களின் எதிர்காலத்துக்கான சிறந்த வேலைத் திட்டங்கள் உள்ளன. அநுரகுமார திசாநாயக்க விடமோ, சஜித் பிரேமதாச விடமோ அவ்வாறான எந்த வேலைத்திட்டங்களும் கிடையாது. அதற்காக நாம் ஆரம்பித்த பயணத்தை தொடர வேண்டியுள்ளது.

அன்று அநுரகுமாரவிடம் ஒப்படைக்கப்பட்ட விவசாய அமைச்சரின் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றியிருந்தால் இந்நாட்டின் விவசாயம் இன்று அபிவிருத்தியடைந்திருக்க வேண்டும் என தெரிவித்த ஜனாதிபதி, கொள்கையற்று வெறுப்பையே விதைக்கும் அவரது வேலைத் திட்டம் நாட்டின் அழிவுக்கு வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

அனைத்தையும் இலவசமாக தருவதாக கூறும் சஜித், அநுரகுமாரவுக்கும் தனக்கும் ஒப்பந்தம் இருப்பதாகவும், தன்னை தோற்கடிக்க அநுரவும் தானும் தயாராகி வருவதாக சஜித் கூறி வருவதாகவும் அவர் ஏற்கனவே தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எனவே, சஜித் பிரேமதாசவுக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கும் வழங்கப்படும் வாக்கு அநுரகுமாரவுக்கு அளிக்கும் வாக்கு என்பதை மக்கள் மறந்து விடக் கூடாது என்றும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இப்போது மக்கள் செப்டம்பர் 21 வாக்களித்து தமது எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டியுள்ளது. நாட்டு மக்களுக்கு உணவு, கேஸ், மருந்து, உரம், தொழில் இருக்காத வேளையில் எந்த தலைவரும் அவற்றை பெற்றுத்தர முன்வரவில்லை.

இன்று வந்திருக்கும் தலைவர்கள் அன்று எங்கிருந்தார்கள்? என்னால் மக்கள் படும் கஷ்டத்தை பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. மக்கள் வரிசைகளில் நிற்பது எனக்கு வருத்தமளித்தது. அதனால் பிரதமர் பதவியை ஏற்றுகொண்டேன். எவரிடமிருந்தும் நான் பதவியை பறித்தெடுக்கவில்லை. பின்பு நான் ஜனாதிபதியாகினேன். இன்று தட்டுப்பாடுகள் இல்லை. வரிசைகளும் இல்லை. ரூபாய் வலுவடைந்திருக்கிறது. பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைகிறது.

பொருளாதாரத்தை நிலைப்படுத்த வேண்டும். அதற்கு இன்னும் நான்கு வருடங்கள் தேவைப்படும். அதற்காகவே மக்களின் ஆணை கேட்கிறேன். இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது. நெருக்கடிகள் அதிகரித்தாலும் மக்களுக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை.

கஷ்டங்களுக்கு மத்தியிலேயே நாட்டை கொண்டு செல்ல வேண்டியிருந்தது. 2023 இலிருந்து வற்வரியை அதிகரிக்க நேரிட்டது. நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் என்ற நம்பிக்கையிலேயே அதனை செய்தோம். பொருட்களின் விலை இன்று குறைந்திருப்பதால் மக்களுக்கு நிவாரணம் கிடைத்திருக்கிறது.

மக்களின் கஷ்டங்களை நாம் அறிவோம். தேவைகளை நிவர்த்திக்க போதிய பணம் இருக்கவில்லை. இந்த நிலையிலிருந்து மக்களை மீட்க வேண்டியிருந்தது. கிடைக்கும் நிவாரணங்களும் போதுமானவை அல்ல. கஷ்டமான தீர்மானங்களையேனும் மேற்கொண்டு பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டியிருந்தது.

இனிவரும் காலங்களில் இயலும் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் வாழ்க்கைச் சுமையைக் குறைத்து, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவோம். புதிய முதலீடுகளை கொண்டு வருவோம். மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களை வழங்குவோம்.

முன்னாள் விவசாய அமைச்சர் அநுரகுமார திசாநாயக்கவும் சஜித்தும் என்ன சொல்கிறார்கள்? அவர்கள் எம்மோடு தொடர்புபடவில்லை என்கின்றனர். எம்மை விரட்டிவிட்டு அதிகாரத்தை அவர்களிடம் தருமாறு கேட்கிறார்கள். அவர்களுக்கு வாக்களிப்பதால் என்ன நடக்கும்? ரூபாயின் பெறுமதி 420 வரையில் அதிகரிக்கும். 370 அதிகரிப்பை தாங்க முடியாத மக்களால் 420 ஐ தாங்க முடியுமா?

தேசிய மக்கள் சக்தியின் வரவு செலவு திட்ட இடைவெளி 400 மில்லியன் ரூபாயாகக் காணப்படுகிறது. அதனை செயற்படுத்தினால் டொலரின் பெறுமதி 470 ரூபாய் வரையில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அவ்வாறு நடந்தால் சர்வதேச நாணய நிதியம் உடன்படிக்கைகளிலிருந்து விலகிச் செல்லும்.

எம்மைத் திருடர்கள் என்று சொல்பவர்கள். எதற்காக மக்களிடம் பொய் சொல்கிறார்கள்? நாம் திருடர்களை பிடிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மோசடியால் திரட்டிய சொத்துக்களை கையகப்படுத்தக்கூடிய சட்டமூலத்தையும் தயாரித்திருக்கிறோம்.

எனவே அவர்கள் மக்களிடம் பொய் சொல்கிறார்கள். அவர்கள் கூறும் பொருளாதார முறை தவறானது. மக்கள் மத்தியில் குரோதத்தை தூண்டிவிட்டே திசைக்காட்டிக்கு வாக்குகளை கோருகிறார்கள்.

அதிகாரத்தை மட்டும் இலக்கு வைத்து செயற்படுகின்றனர். வரியைக் குறைத்தால் என்ன நடக்கும் என்பதையே கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் பார்த்தோம். 2020 களில் நான் உண்மையை சொன்னதால் நான் தேசிய பட்டியலில் பாராளுமன்றம் வரவேண்டிய நிலைமை உருவாகியது.

எமது வரவு செலவு திட்ட யோசனைகளை நான் வெளியிடுகிறேன். அநுரவும் மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும். இன்று என்னை விவாதத்திற்கு அழைக்கிறார். நான் விவாதத்திற்குத் தயாராகவே இருக்கிறேன். முதலில் அவர்கள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை முன்னெடுப்பார்களா அல்லது இறக்குமதியில் தங்கியிருப்பார்களா என்பதை நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் வீடியோ மூலம் பகிரங்கமாக விவாதம் நடத்தவும் நான் தயாராக இருக்கிறேன்.

எனவே மக்கள் தம்முடைய, தமது பிள்ளைகளுடைய எதிர்காலம் பற்றி சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்.

மறுமுனையில் சஜித் எல்லாவற்றையும் இலவசமாக தருவேன் என்கிறார். அநுரவும் நானும் அவரை தோற்கடிக்க 'டீல்' போட்டிருப்பதாகச் சொல்கிறார். அதுவே அவரின் தோல்வியைக் காட்டுகிறது. எவ்வாறாயினும் சஜித்துக்கும் நாமலுக்கும் அளிக்கப்படும் வாக்குகள் அனுரகுமார திசாநாயக்கவை பலப்படுத்தும் வாக்குகளாக அமையும்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் எனக்கும். மொட்டுக் கட்சியினர் என்னோடு இருக்கின்ற அணியினருக்கும் வாக்களிப்பதே பொறுத்தமாக அமையும். எனவே திசைக்காட்டிக்கு வாக்களிக்கத் தீர்மானித்திருப்பவர்கள் முதலில் அவர்களின் ஆட்சியில் ரூபாயின் பெறுமதியைத் தெரிந்து கொள்ளுங்கள். பின்னர் அவர்களுக்கு வாக்களியுங்கள்.

எனவே, தேர்தலில் சிந்தித்து வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது ரூபாவும் கிடைக்காது." என்றார்.





# இலவசக் கல்வியை முழுமையாக பாதுகாத்து மாற்று கல்விக்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்



தொழில் ரீதியான போதனையாளர்களுடைய செயற்பாடுகள் தற்போதைய கல்வி முறையோடு பொருந்த வேண்டும். இலவச கல்விக்காக நாம் முழுமையாக செயல்படுவோம். இலவச கல்வியை அறிமுகப்படுத்திய சந்தர்ப்பத்தில் சமூகத்தில் உயர் வர்க்கத்தில் இருந்த சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். எனவே இலவச கல்வியை முழுமையாக பாதுகாப்பதோடு மாற்றுக் கல்விகளுக்கான வாய்ப்புகளையும் பலப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சிறந்த தரத்திலான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளமையால் மாற்று வழிமுறைகளுக்கு செல்ல வேண்டாம் என்று தடை செய்ய முடியாது.

கொழும்பில் (11) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தொழில் ரீதியான போதனையாளர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்திற்காக கல்வித்துறையில் விசேட மாற்றங்கள் அவசியமாகின்றது. சில துறைகளை தவிர எமது நாட்டில் உள்ள சில துறைகளுக்கு தொழிற்சந்தையில் சிறந்த இடம் கிடைப்பதில்லை. எனவே சர்வதேச தொழிற்சந்தைக்கு தேவையான துறைகளுக்கு ஊழியர்களை வழங்குகின்ற விதத்தில் கல்வித்துறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். மேலதிக வகுப்புகளை தடை செய்வது அதற்கான தீர்வல்ல. தற்போதுள்ள சூழ்நிலையில் இலவச கல்வி பாதுகாக்கப்படுவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



தனியார் கல்வித் துறைக்கு எதிர்ப்பு தெரிவித்த சிலரின் பிள்ளைகளும் தனியார் கல்வியைப் பெற்று, தனியார் பல்கலைக்கழகங்களிலே பட்டப் படிப்பை நிறைவு செய்திருக்கின்றார்கள். அரசியலில் ஈடுபடுகின்ற போது ஒரு நிலைப்பாட்டிலும் குடும்ப உறுப்பினர்களுக்காக வேறு ஒரு நிலைப்பாட்டை பெற்றுக் கொள்வதும் பொருத்தமான விடயம் அல்ல என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவர்கள் ஏனையவர்களுக்கு ஆலோசனை வழங்குவதை விட்டு முதலில் தான் சரியானதை செய்ய வேண்டும். இப்பேற்பட்டவர்களுடைய இரு தரப்பு சிந்தனையை வெளிப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 14 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
லுஹர் - 12.08
அஸர் - 03.14
மஃரிப் - 06.13
இஷா - 07.23

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 29
ராகுகாலம் : காலை : 9.03 - 10.33வரை
சுபநேரம் : மாலை : 3.03 - 4.33வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



மக்களால் தெரிவு செய்யப்படும்

# புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தயார்

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு



மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலானது மக்களினால் தீர்மானிக்கப்படவேண்டியதொன்று எனவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை தொடர்பான மூன்றாவது மீளாய்வு நடவடிக்கைகள், ஜனாதிபதி தேர்தலின் பின்னர் முன்னெடுக்கப்படும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஜூலி கொஸாக் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளின் பின்னர், அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை, வரலாற்றில் எதிர்நோக்கிய மிக மோசமான நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய அவர், கடுமையான முயற்சியில் வென்றெடுக்கப்பட்ட விடயங்களை இலங்கை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்பு வரையறுக்கப்பட்டதாகவும் அரசாங்கத்துக்கும் கடன் வழங்குனர்களுக்கும் இடையிலேயே பிரதான இணக்கப்பாடுகள் எட்டப்படவேண்டுமெனவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஜூலி கொஸாக் தெரிவித்தார்.

# பெண்கள், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக

## சீதா அரம்பேபொல பதவிப் பிரமாணம்



பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல, நேற்று (13) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அதன்படி, சுகாதார இராஜாங்க அமைச்சுக்கு மேலதிகமாக, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொல நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த பதவிப் பிரமாண நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சஜித் – த.மு.கூ உடன்படிக்கை ஒரு வரலாற்று மைல் கல்

## மனோ கணேசன் தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி புரிந்துணர்வு ஒப்பந்தம், மலையக வரலாற்றில், ஜனாதிபதியாகும் வாய்ப்புள்ள இலங்கையின் பெரும் கட்சி தலைவர் ஒருவருடன் கையெழுத்திட்டு செய்துகொள்ளப்பட்டுள்ள முதல் ஒப்பந்தமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஈழத் தமிழ் உடன்பிறப்புகள் தொடர்பாக செய்யப்பட்ட பண்டாசெல்வா, டட்லிசெல்வா ஒப்பந்தங்களுக்கு இணையான சமனான ஒப்பந்தம் இதுவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, தமிழ் முற்போக்கு கூட்டணியின் மலையக சாசனத்தை அடிப்படையாகக்கொண்ட சஜித் – தமிழ் முற்போக்கு கூட்டணி புரிந்துணர்வு உடன்படிக்கை, மலையக வரலாற்றில் ஒரு மைல்கல் என த.மு.கூ தலைவர் மனோ கணேசன் எம்.பி மேலும் தெரிவித்தார். நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற, மலையக சாசனம் மற்றும் சஜித் – த.மு.கூ புரிந்துணர்வு உடன்படிக்கை வெளியீட்டு விழாவில், கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் திகாம்பரம், வீ.இராதாகிருஷ்ணன், சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பூஸா சிறைச்சாலையில் உள்ள

# 'வேலே சுதா'வின் அறைக்குள்ளிருந்து நவீன கையடக்கத் தொலைபேசி மீட்பு



பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள 'வேலே சுதா' என்றழைக்கப்படும் ஜி.டபிள்யூ.சமந்த குமாரவின் சிறை அறையிலிருந்து நவீன கையடக்கத் தொலைபேசியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையின் விசேட பிரிவின் ஏ பிரிவு எண் 38 க்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது, அதிரடிப்படை அதிகாரிகளால் இந்த கையடக்கத்தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக் கையடக்கத்தொலைபேசி 'வேலே சுதா' பயன்படுத்தியதாக சந்தேகிக்கும் சிறைச்சாலை நிர்வாகம் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜா நேற்று பதவி இடை நிறுத்தம்

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று வெள்ளிக்கிழமை (13) நீதிச்சேவை ஆணைக்குழுவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, ஜனாப் பயாஸ் ரசாக் மாவட்ட நீதிபதியாகவும், ஜீவராணி கருப்பையா பிரதம நீதிவான் நீதிமன்ற நீதிவானாகவும் நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்து தேர்தல் பிரசாரங்களும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவு




ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெற வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, எந்தவொரு அரசியல் கட்சி, வேட்பாளர் அல்லது ஆதரவாளர் தொடர்பான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அரச அல்லது தனியார் வாகனங்களில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கர்கள் போன்றவற்றை அகற்றுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களுக்கு ஆறு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் 48 மணி நேரத்துக்குள் அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர்

# ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தும் எண்ணம் அரசுக்கு கிடையாது



தேர்தலின் பின்னர் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைபடுத்தும் திட்டம் இல்லையென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணத்திலக்க தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைபடுத்தும் அதிகாரம் ஜனாதிபதியிடம் காணப்படுவதாகவும் ஜனாதிபதி விரும்பினால், ஊரடங்கு சட்டத்தை நடைமுறைபடுத்த முடியுமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் பின்னர், சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு ஊரடங்குச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் ஸ்திரமற்ற தன்மையால்

# டொலர் கடனீட்டு பத்திரங்கள் விற்பனை செய்வது அதிகரிப்பு

## தேர்தல் நெருங்கி வருவதாலேயே நிகழ்வதாக Bloomberg சுட்டிக்காட்டு



இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நெருங்கி வருவதால், ஏற்படும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை காரணமாக நாட்டின் (dollar bondholders) டொலர் கடனீட்டு பத்திரதாரர்கள்' தங்களது பத்திரங்களை விற்பனை செய்வது குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதாக Bloomberg இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இலங்கையின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால் இறுதிக் கட்ட கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடல்கள் தோல்வியடையுமென முதலீட்டாளர்கள் அஞ்சுவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் தீவிரமடைந்துவரும் அரசியல் நிச்சயமற்ற தன்மையே இந்த நிலைக்கு காரணமென அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

தாம் ஆட்சிக்கு வந்தால், சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதுள்ள நிலைமைகளை மாற்றியமைக்கும் பேச்சுவார்த்தைக்கு திரும்புவோமென எதிர்க்கட்சி வேட்பாளர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளதாக அந்த இணையத்தளத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பத்திரப்பதிவுதாரர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் விதிமுறைகளை மேலும் மாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் விரும்பினாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவ்வாறு செய்வது கடினமென கொலம்பியா த்ரெட்நீடில் முதலீட்டு நிறுவனத்தின் ஆய்வாளர் ஒருவரை மேற்கோள்காட்டி ப்ளூம்பெர்க் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்திலுள்ள M&G குளோபல் முதலீட்டு முகாமைத்துவ நிறுவனத்தின் மூலோபாய ஆய்வாளர் ஒருவர், இலங்கை டொலர் பத்திரங்களின் தற்போதைய நெருக்கடியால், தேர்தல் முடிவுகளின் நிச்சயமற்ற தன்மை மற்றும் கடன் மறுசீரமைப்பு காலக்கெடுவில் தாக்கத்தை ஏற்படுத்துமென எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த நபருக்கு

## 06 மாத கடூழிய சிறைத்தண்டனை




அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த நபரொருவருக்கு 6 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குருநாகல், மாதவ பிரதேசத்தைச் சேர்ந்த முட்டை வியாபாரி ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்ச சில்லறை விலையை விட, அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்த நபர், பிலெஸ்ஸ நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போதே இந் நபருக்கு எதிராக 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 06 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் 55,000 மெ.தொன் MOP உரம்

## விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடு



உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 55,000 மெற்றிக் தொன் (MOP) மியூரியேட் ஒப் பொட்டாசியம் உரத்தை இலங்கை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த உரத்தை பெற்றுக்கொள்வதற்காக கடந்த மார்ச் மாதம் முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரசாங்க அதிகாரிகளின் திறமையின்மையால் நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து இந்த வாரத்துக்குள் இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்யுமாறும், இதற்கான உடன்படிக்கையை கைச்சாத்திட மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைவாக, நெற்பயிர்ச் செய்கைக்கு மிகவும் அத்தியாவசிய உரமான 55,000 மெற்றிக் தொன் MOP உரம் எதிர்வரும் இரண்டு பருவங்களில் நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக வழங்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படும் இந்த MOP உரத்தை முற்றிலும் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் எனவும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த. உயர் தரப் பரீட்சை நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பம்

## டிசம்பர் 20ஆம் திகதி நிறைவு



2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர்,

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிட எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடும் பணி தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும்,

மிக விரைவில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடவேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார். பெறுபேறுகளை இறுதி செய்யும் பணி இன்னும் சில நாட்களில் நிறைவடையும் எனவும், இன்னும் இரு வாரங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு

# கையடக்கத் தொலைபேசி எடுத்துச் செல்வது தடை



ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் வாக்காளர்கள் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துச்செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தடை அமுலில் இருக்கும்போதே, தபால் மூல வாக்களிப்பின்போது, வாக்குச் சீட்டை படமெடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றிய சம்பவம் தொடர்பாகவும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், வாக்களிப்பு நிலையங்களுக்குக் கையடக்கத் தொலைபேசியை எடுத்துச்செல்லகூடாதென ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த தடையை, மேலும் கடுமையாக அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாவும் அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 29ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 10

### குறள் தரும் சிந்தனை

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

சான்றோரின் நற்பண்பே குறையத் தொடங்கினால் அதனை இந்த உலகம் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளாது.

## போலியான வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்றும் முயற்சி!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் விரைந்தோடி வந்து விட்டது. அதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஏழு நாட்களே உள்ளன.

தேர்தல் களத்தில் இறுதிக்கட்டப் பரபரப்பு தற்போது நிலவிக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மாத்திரமன்றி, அவர்களது கட்சிகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் தேர்தல் பிரசாரப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு தரப்பில் இருந்தும் அனல் பறக்கும் கோஷங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வேட்பாளர்களில் சிலர் உண்மை பேசுகிறார்கள். தாங்கள் இதுவரை நிறைவேற்றிய காரியங்களையும், நிறைவேற்றவிருக்கின்ற காரியங்களையும் ஒளிவுமறைவின்றி அவ்வேட்பாளர்கள் கூறி வருகின்றனர்.

ஆனால் சில வேட்பாளர்களோ உண்மைகளைத் தவிர உண்மைக்குப் புறம்பானவற்றையே அதிகம் பேசுகிறார்கள். தங்களால் எக்காலத்திலும் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். மக்களின் வாக்குகளைக் கவர்ந்திழுப்பதற்காக அவர்கள் போலியான வாக்குறுதிகளையே மக்கள் மத்தியில் கூறுகின்றனர்.

அவர்களுக்குத் தேவை மக்களின் வாக்குகள் மாத்திரமேயாகும். வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? அதற்கான சாத்தியம் உண்டா என்பதையெல்லாம் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. வாக்குகளை சுருட்டிக்கொள்ள வேண்டுமென்பதே அவர்களின் எதிர்பார்ப்பு ஆகும். எமது நாட்டு மக்கள் உண்மைகளைப் புரிந்து கொள்கின்ற விவேகம் அற்றவர்கள் என்று அந்த அரசியல்வாதிகள் தவறாக நினைக்கின்றார்களோ தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் வெற்றி பெற்றால் மக்களுக்கு எதையெல்லாமோ வழங்கப் போவதாக அவர்கள் வாக்குறுதி அளிக்கின்றனர். அவர்களில் சிலர் வழங்குகின்ற வாக்குறுதிகள் நகைச்சுவையாகவே உள்ளன. வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இல்லாத போதிலும், அவ்வாறான வாக்குறுதிகளை அவர்கள் ஏன் வழங்குகின்றார்களெனத் தெரியவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரங்கள் பெரும்பாலும் கடந்த காலம் பற்றிய பார்வையாகவே உள்ளன. இரு வருட காலத்துக்கு முன்னர் நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்றிருந்த வேளையில், நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க எதிரணி அரசியல்வாதிகள் முன்வராத போது, துணிச்சலுடன் நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றவர் அவர்.

நாட்டைப் பொறுப்பேற்றது முதல் பொருளாதாரத்தைச் சீர்படுத்துவதற்காக தாம் மேற்கொண்ட பெரும் முயற்சிகளை ஆதாரங்களுடன் மக்களிடம் முன்வைத்து வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தாம் ஏற்படுத்தியுள்ள திட்டங்கள் நிறைவுபெற வேண்டுமானால், மேலும் ஐந்து வருட காலப்பகுதிக்கு ஆட்சியதிகாரத்தில் இருப்பது அவசியமென்பதே ஜனாதிபதியின் கருத்து ஆகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மாத்திரமன்றி, பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியுள்ள முற்போக்கான திட்டங்கள் ஏராளம். அவரது திட்டங்களின் பலனாகவே இலங்கைத் தேசம் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தற்போது மீண்டெழுந்துள்ளதென்பது உண்மை. அவர் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்காவிடின் பங்களாதேஷ் நாட்டில் தற்போது நிலவுகின்ற கொந்தளிப்பான நிலைமையே இலங்கையிலும் ஏற்பட்டிருக்கும் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பலவகையான வாக்குறுதிகளை மக்களுக்கு இப்போது வழங்கி வருகின்ற போதிலும், மக்கள் அவற்றையெல்லாம் பகுத்தறிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் உள்ளவர்களென்பதை மறந்து விடலாகாது. தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஒன்றுதிரண்டுள்ள மக்களை ஆதாரமாக வைத்து வெற்றி தோல்விகளை ஒருபோதுமே முன்கூட்டிக் கணித்துவிடவும் முடியாது.

கடந்த காலத்தில் நடைபெற்ற பல தேர்தல்களை இதற்கான உதாரணங்களாகக் கொள்ள முடியும். குறித்ததொரு கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரண்டிருக்கும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து, அக்கட்சிக்குத்தான் வெற்றி கிட்டும் என்று நம்பி ஏமாந்த அனுபவங்கள் பல உள்ளன. எனவே தேர்தல் முடிவடையும் வரை எதையும் ஊர்ஜிதமாகக் கூறிவிட முடியாது.

ஜனரஞ்சகமான பேச்சுகளையும், வீராவேச வசனங்களையும் கேட்டுவிட்டுப் போவதற்காக மக்கள் கூட்டம் திரண்டு வருவதுண்டு. ஆனால் அங்கு வருகின்ற அத்தனை பேருமே அக்கட்சிக்குத்தான் வாக்களிப்பரென்பதை உறுதியாக நம்ப முடியாது. இறுதிநேர முடிவுகள் வேறுவிதமாகவும் அமைவதுண்டு.

களநிலைமை இவ்வாறிருக்கையில், இம்முறை தேர்தல்கால வன்முறைகள் பெருமளவு குறைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. வாக்காளர்கள் மத்தியில் இவ்வாறான பக்குவம் உருவாகியிருப்பது பாராட்டத்தக்கதாகும். இவ்வாறான அரசியல் நாகரிகம் தொடருவது விரும்பத்தக்கது. எதிர்வரும் தேர்தல் சுமுகமாக நடைபெறுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமென்பதே ஜனநாயகத்தை நேசிக்கும் மக்களின் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

# பாலையடி வாலவிக்னேஸ்வரர் ஆலய சித்திரத்தேர் வடித்த அஜந்தனுக்கு 'சிற்பக் கலையரசன்' விருது







**தேர் அன்பளித்த பிரபாகர குருக்களுக்கு 'விநாயக பக்தி கிரியாசாகரர்' விருது**

காரைதீவு பாலையடி வாலவிக்னேஸ்வரர் ஆலயத்திற்கான சித்திரத்தேரை வடித்த சிற்பாச்சாரி அஜந்தனுக்கு 'சிற்பக் கலையரசன்' விருதும், குறித்த தேரை அன்பளித்த மகோற்சவகுரு சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்களுக்கு 'விநாயக பக்தி கிரியாசாகரர்' விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாக வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் கன்னித் தேரோட்டம் கடந்த வாரம் பகல் 12 மணியளவில் விநாயகர் சதுர்த்தியன்று ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இதுவே காரைதீவு வரலாற்றில் முதலாவது சித்திரத்தேர் என்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்றில் முதல் தடவையாக 39 இலட்ச ரூபாவில் 21 அடி உயர பாரிய சித்திரத்தேர் ஒன்றை ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்த அமரர் சண்முகரெத்தினம் குருக்கள் குடும்பத்துக்கு நன்றி கூறி அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஆலய பரிபாலனசபைத் தலைவர் இ.தவராசா தலைமையில் ஆலயசந்தானத்துபிரதிநிதி விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

அதன் போது இத்தேரை குடும்பம் சார்பாகக் கையளித்த மஹோற்சவ குருவான சுவிற்சர்லாந்து தூண் ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலய பிரதம குரு கிரியாதிலகம் சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார் .

அவர் 'விநாயக பக்தி கிரியாசாகரர்' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். வாழ்த்துப்பாவை வி.ரி.சகாதேவராஜா வாசித்து பரிபாலன சபையினர் கையளித்தார்.

இந்த ஆலயத்தின் முன்னாள் பிரதமகுரு யாழ்ப்பாணம் கோப்பாய் இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலய ஆதீன கர்த்தா அமரர் சிவஸ்ரீ இரத்தினசபாபதி சண்முகரெத்தினம் குருக்கள் வடிவாம்பிகை குடும்பம் சார்பாக இந்த அற்புதமான ஆன்மிக அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது . அமரர் சிவஸ்ரீ சண்முகரெத்தினம் குருக்கள் இவ்வாலயத்தில் பல வருடகாலம் பிரதம குருக்களாக இருந்து நிறைந்த சேவையாற்றியவர். அவரது சிரேஷ்ட புதல்வரான வடக்கு கிழக்கில் மிகவும் பிரபலமான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தற்போது இந்த ஆலயத்தின் பிரதம குருவாக இருக்கிறார் . அவர் தற்சமயம் கனடாவில் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தில் பிரதம குருவாக செயற்படுகிறார். அவர் ஒக்டோபர் 1 இல் நாடு திரும்புவார்.

அதேசமயம் இந்த சித்திரத்தேரை வடிவமைத்த யாழ்ப்பாணம் கைதடி தச்சன்தோப்பைச் சேர்ந்த சிற்பாச்சாரி சுப்பிரமணியம் அஜந்தனுக்கு 'சிற்பக்கலையரசன்' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. தர்மகர்த்தா க.சுபரெத்தினம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

குடும்பத்தினர் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலில் புதிய கட்டட தொகுதிக்கான ஆரம்பப் பணிகள்







மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பெரியபள்ளிவாசல் வளாகத்தில் பள்ளிவாசலுக்கான பெண்கள் தொழுகை அறை, வுழு செய்யும் இடம், களஞ்சிய அறை, குளியலறை, சமையலறை, மலசலகூடத் தொகுதிகளை உள்ளடக்கியதான கட்டட தொகுதிக்கான ஆரம்பப் பணிகளை முன்னெடுக்கும் நிகழ்வு பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும் விவசாயம், விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான எம்.எஸ்.அபுல் கலீஸ் முன்னிலையில் கட்டடக் குழுத் தலைவரும் வர்த்தகப் பிரமுகருமான எம்.ஐ.ஏ. பரீட் தலைமையில் நடைபெற்றது.

பள்ளிவாசல்களை அழகுபடுத்துதல், மஹல்லா வாசிகளுக்கு தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவரும், மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளருமான எப்.எம்.அஹமது அன்ஸார் மௌலானா சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் மருதமுனையின் வரலாற்றில் பள்ளிவாசல்களின் வகிபங்கு அதற்கு பிரதேச மற்றும் பிரதேசத்திற்கு வெளியில் வாழும் மக்கள் வழங்கி வரும் பணிகள் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார்.

விசேட துஆ பிரார்த்தனையை பள்ளிவாசலில் பேஷ் இமாம் அல்ஹாபிழ் மௌலவி ஏ.ஆர்.பைசல் கியாஸ் நிகழ்த்தினார். இதனை அடுத்து பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், மரைக்கார் மார், குடிவழித் தலைவர்கள், மஹல்லா வாசிகள் என பலரும் ஆரம்ப பணிகளுக்கான கட்டுமான வேலை திட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்பள்ளிவாசல் கட்டடக் குழு தலைவராக எம்.ஐ.ஏ. பரீட் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவருடைய சொந்த நிதி அனுசரணையில் தனது தாய், தந்தையர்கள் நினைவாக இந்த கட்டடத் தொகுதி அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. நிகழ்வுகளை கட்டடக்குழு செயலாளர், சிரஷ்ட உடற்கல்வி ஆசிரியர் யூ.எஸ். சமீம் ஒருங்கிணைப்பு செய்து தொகுத்து வழங்கினார்.

ஏ.எல்.எம்.ஷினாஸ்...
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# முஸ்லிம்களின் நலனுக்காக தன்னை அர்ப்பணித்தவர் அன்வர் இஸ்மாயில்

## அன்னாரின் 17 ஆவது நினைவுதினம் இன்று



நீர்ப்பாசனத்துறை முன்னாள் அமைச்சரான மர்ஹூம் எம்.ஐ. அன்வர் இஸ்மாலின் 17ஆவது நினைவு தினம் (14) இன்றாகும். மக்களுக்கான அரசியலை குறுகிய காலத்தில் நடத்திக்காட்டி மக்கள் பணியிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டு வந்தவர் சட்டத்தரணி மர்ஹூம் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் ஆவார்.

அன்வர் இஸ்மாயில் 2001-2007 காலப்பகுதியில் வரை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றினார். மிகவும் இளம் வயதில் பாராளுமன்றத்துக்குச் சென்று, குறுகிய காலத்துக்குள் அமைச்சராகி தனது பிரதேசத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் அளப்பரியன.

அன்வர் இஸ்மாயில் காலமாகி இன்றுடன் (14) 17 வருடங்கள் பூர்த்தியாகின்றன. முஸ்லிம் அரசியலிலும் அவர் பிறந்த மண்ணான சம்மாந்துறை அரசியலிலும் அவர் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். சட்டபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டது முதல் 1988 இல் மு.கா தலைவர் அஷ்ரஃப்போடு இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மிகத் தீவிர உறுப்பினராக தன்னை மாற்றிக் கொண்டார். நிறைந்த பேச்சாற்றல், வசீகரம், தைரியம், மக்களின் மனதினை ஆளுதல், அறிதல், சந்தர்ப்பத்தினை நன்றாக சரிவரப் பயன்படுத்தல், அரசியலில் மேலிடத்தில் சாதிக்கக் கூடிய மதிநுட்பம், பரந்த அரசியல் அனுபவம் போன்ற குணங்களினால் தனக்கென்றுஆதரவாளர்களை வசீகரித்தார்.

2000ஆம் ஆண்டு அஷ்ரஃப் மறைவின் பின்னர் 2001 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

கிழக்கு மாகாண உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற அவர் பின்னர் தேசியப் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 2005இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக உழைத்தார். அந்த அரசாங்கத்தின் நீர்ப்பாசன அமைச்சராகக் கடமையாற்றினார்.

பல நீர்ப்பாசனத் திட்டங்களை தொடக்கி வைத்தார். தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தினார். 'மக்கள் மணிமனை' அமைத்து இரவு பகலாக மக்களுக்கு சேவை செய்தார்.

40 ஆண்டுகள் வாழ்ந்த அன்வர் இஸ்மாயில் சட்டத்தரணியாக, பாராளுமன்ற உறுப்பினராக, பிரதியமைச்சராக, அமைச்சராக குறுகிய காலம் பணியாற்றினார். சம்மாந்துறை வரலாற்றில் அவர் மறக்க முடியாத ஆளுமை.

எம்.சி.அன்சார்...
(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

# ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் பிரிமியர் லீக் சுற்றுப் போட்டிகள்







மலையகத்தில் புகழ் பூத்த ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் மற்றுமொரு சாதனையாக ஹைலண்ட்ஸ் பிரிமியர் லீக் (HPL 2024) கிரிக்கட் சுற்றுப் போட்டி மற்றும் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

பாடசாலை மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பாடவிதான செயற்பாடுகளுக்கு அப்பால் புறக்கிருத்திய செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் தரம் 6,7,8,9,10,11 மற்றும் உயர்தர வகுப்புகள் என தனித்தனியாக போட்டிகள் இடம்பெற்றன.

இப்போட்டிகள் மூன்று தினங்கள் ஹட்டன் டன்பார் மைதானத்தில் இடம்பெற்றன.

கல்லூரியின் முதல்வர் எஸ். ராஜன் அவர்களின் வழிகாட்டலினூடாகவும், பிரதி அதிபர்களினதும், விளையாட்டுக் குழுவினதும், வகுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் அனைவரினதும் பெருமுயற்சியூடாகவும் வெற்றிகரமாக நிகழ்வு நடைபெற்றது.

அனைத்துப் போட்டிகளிலும் வகுப்பு ரீதியாக 1 ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றமைக்கான கேடயமும், போட்டிகளில் தனிப்பட்ட சாதனைகளை பதிவு செய்த 42 மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# உக்ரைன் முன்னெடுக்கும் போர்நிறுத்தத் திட்டம்: யுத்தத்தை நீடிப்பதற்கு ரஷ்யா முயற்சிக்கின்றதா?

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான திட்டம் குறித்து உக்ரைன் பேசியிருந்த நிலையில், அதை ரஷ்யா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. போரை முடிவுக்குக் கொண்டு வரும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறியுள்ள ரஷ்யா, தனது சிறப்பு இராணுவ நடவடிக்கை தொடரும் என்று கூறி இருக்கிறது.

ரஷ்யாவுடனான போர் இறுதியில் பேச்சுவார்த்தையிலேயே முடிவடையும், ஆனால் இதன் போது, கீவ் ஒரு வலுவான நிலையில் இருக்க வேண்டும் என்றும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் கூர்ஸ்க் பிராந்தியத்தில் மூன்று வார கால ஊடுருவல் அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம், தமது போர்நிறுத்த திட்டத்தை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தி ரஷ்யாவின் உள்பகுதிகளை தாக்க அமெரிக்காவிடம் அனுமதி கேட்பேன் எனவும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் கூர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் இராணுவம் 3 வாரங்களுக்கு முன் நுழைந்தது. அங்குள்ள ஏராளமான குடியிருப்பு பகுதிகளை தங்கள் வசப்படுத்தியது. மேலும் ரஷ்ய இராணுவ வீரர்களையும் சிறைப்பிடித்து வைத்தது. இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான சண்டை மேலும் வலுப்பெற்றுள்ளது.

இதன் மூலம் ரஷ்யாவை போர் முடிவுக்கான பேச்சுவார்த்தைக்கு தள்ள முடியும். இதுதான் என்னுடைய யோசனை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சம், போரை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யாவை கட்டாயப்படுத்துவதாகும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனநாயகக் கட்சியின் துணைத் தலைவர் கமலா ஹாரிஸுடனும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்புடனும் தமது திட்டத்தைப் பற்றி விவாதிக்கவுள்ளதாக உக்ரைனின் அதிபர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**உக்ரைன் போர் நிறுத்த திட்டம்:**

இம்மாதம் நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பொதுசசபையில் கலந்து கொள்ள அமெரிக்கா செல்ல இருப்பதாகவும், அதன்போது, பைடனைச் சந்திக்கத் தயாராகி வருவதாகவும் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.



ரஷ்யா-உக்ரைன் இடையே இரு வருடங்களுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை முழுமையாக நடைபெறவில்லை. ஆயினும் உக்ரைன் அதிபரின் போர் முடிவுத் திட்டத்தை நிராகரித்து, சண்டை நீடிக்கும் என ரஷ்யா அறிவித்துள்ளது. உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியின் போர் முடிவு திட்டம் வெறும் சோடனை என ரஷ்யா புறந்தள்ளியுள்ளது. அத்துடன் சண்டை நீடிக்கும் என்ற அறிவிப்பால் தொடர் பதற்றம் நிலவி வருகிறது.

ஜெலன்ஸ்கியின் திட்டம் குறித்த கேள்விக்கு ரஷ்யா அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகையில், 'எங்களது இலக்கை அடையும் வரை உக்ரைன் மீதான சண்டை தொடர்ந்து நடைபெறும். உக்ரைனின் பிரதிநிதிகளிடமிருந்து இதுபோன்ற அறிக்கைகளை கேட்பது இது முதல் முறை அல்ல. இந்த கீவ் ஆட்சியின் போலி நாடகத் தன்மையை நாங்கள் அறிவோம்" என்றார்.

தற்போது உக்ரைன் படைகளை கூர்ஸ்க் பிராந்தியத்தில் இருந்து வெளியேற்றுவது ரஷ்யாவின் முதன்மையாக நோக்கமாகும். அதேவேளை உக்ரைன் ஊடுருவலைத் தொடர்ந்து ரஷ்யா தாக்குதலை அதிகரித்துள்ளது.



ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் இப்போது மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து சர்வதேச தலைவர்கள் பலரும் கருத்துக் கூறி வருகிறார்கள்.

இதற்கிடையே "போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று கூறியுள்ள ரஷ்யா, உக்ரைன் மீதான சிறப்பு இராணுவ நடவடிக்கை திட்டமிட்டபடி தொடரும் என்றும் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

ரஷ்யாவின் சில பகுதிகள் மீது உக்ரைன் தாக்குதல் நடத்தி இருந்த நிலையில், அதற்கு புட்டின் இராணுவம் மிகத் தீவிரமாகப் பதிலடி கொடுத்து வருகிறது. உக்ரைன்_ ரஷ்யா இடையேயான போர் இப்போது மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

ரஷ்யா_ உக்ரைன் இடையேயான இந்த மோதலை போர் என்று ரஷ்யா கூறுவதில்லை. தனது நாட்டை பாதுகாக்க எடுக்கப்படும் சிறப்பு இராணுவ நடவடிக்கை என்றே கூறி வருகிறது. இப்போதும் கூட சிறப்பு இராணுவ நடவடிக்கை தொடரும் என்றே ரஷ்யா கூறியுள்ளது.

ரஷ்யாவின் கூர்ஸ்க் பிராந்தியத்தில் இப்போது உக்ரேன் ஊடுருவி இருக்கிறது. இது போர்நிறுத்தத்தின் ஒரு பகுதி திட்டம்தான். இது தவிர பொருளாதார மற்றும் தூதரக ஆலோசனை திட்டங்களும் இதில் இருக்கிறது என செய்தியாளர்களிடம் பேசுகையில் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

அத்துடன் ரஷ்யாவுக்குள் நீண்ட தூரம் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் ஆயுதங்களைப் பயன்படுத்த அமெரிக்கா எங்களை அனுமதிக்கவில்லை. இதற்கான அனுமதியை அமெரிக்கா அளித்தால் போரை முடிவுக்குக் கொண்டுவர எங்களால் ரஷ்யாவைக் கட்டாயப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரஷ்ய அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில் "தற்போதைய சூழலில் சிறப்பு இராணுவ நடவடிக்கையை நிறுத்த எந்தவொரு திட்டமும் இல்லை. எங்கள் இலக்குகளை அடையும் வரை சிறப்பு இராணுவ நடவடிக்கை தொடரும். அதில் எந்தவொரு சந்தேகமும் வேண்டாம்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# இந்தியாவுடன் பகைமை மறந்து நட்புக்கரம் நீட்டும் மாலைதீவு!



இந்தியாவுடன் சமீப காலமாக எதிர்ப்புப் போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த மாலைதீவு அரசாங்கத்தின் நடவடிக்கையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக மாலைதீவில் கருத்துத் தெரிவித்த இரண்டு பேர் பதவி விலகினர். இந்நிலையில் மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு அரசுமுறைப் பயணமாக விரைவில் இந்தியா வரவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தியாவுடன் முன்னர் நட்புப் பாராட்டிய நாடுகளில் மாலைதீவும் ஒன்று. இதனிடையே கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், சீனாவுக்கு நெருக்கமான முகமது மூயிஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தார். அப்போது தொடக்கம் அவர் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார். பதவியேற்ற குறுகிய காலத்திலேயே, அவர் மாலைதீவில் இருந்த இந்திய இராணுவப் படையை வெளியேற்றினார்.

அதேநேரம் அந்த நாட்டின் இரண்டு அமைச்சர்களான மரியம் ஷிவுனா, மல்ஷா ஷெரிப் ஆகியோர் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக கடந்த ஜனவரி மாதம் சமூகவலைதளங்களில் கருத்துகளை முன்வைத்தனர்.

கடல்சார் கண்காணிப்புக்காக இந்திய இராணுவம் அதிநவீன ஹெலிகொப்டர்கள், நவீன விமானம் உள்ளிட்டவற்றை மாலைதீவுக்கு வழங்கியிருந்தது. இந்தக் கருவிகளை இயக்குவதற்காக சுமார் 100 இந்திய இராணுவ வீரர்கள் மாலைதீவில் இருந்தனர். அவர்களை வெளியேற்றியதால், இந்தியா-மாலைதீவு இடையேயான உறவில் விரிசல் விழுந்தது. இந்திய இராணுவத்தை வெளியேற்றிவிட்டு, மாலைதீவு அரசாங்கம் சீனாவிடம் இராணுவ உதவி கேட்டு ஒப்பந்தமும் செய்யப்பட்டது.

இந்தியா-மாலைதீவு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்கும் நிகழ்ச்சிக்கு மாலைதீவு அதிபர் முகமது முய்சுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் பதவியேற்பு விழாவில் முகமது மூயிஸ் கலந்து கொண்டார். இதையடுத்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், கடந்த மாதம் மாலைதீவு சென்றிருந்தார். அப்போது முதலே மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விட்டன.

அதன் தொடர்ச்சியாக மோடி குறித்து விமர்சித்த, இரண்டு அமைச்சர்கள் தங்களின் பதவியை இராஜினாமா செய்துள்ளனர். இதுவும் இருநாட்டு உறவை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று தகவல் வெளியானது. இந்நிலையில் மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு, முதல்முறையாக அரசுமுறைப் பயணமாக விரைவில் இந்தியா வரவுள்ளதாக அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

முகமது முய்சு, அடுத்த வாரமே டெல்லி வரவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மாலைதீவில் பிரதமர் மோடிக்கு எதிராக விமர்சனம் செய்த அமைச்சர்கள் இருவரும் இராஜினாமா செய்த அதே நாளில், அந்த நாட்டு ஜனாதிபதி முகமது முய்சுவின் இந்தியப் பயணம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. இதனால் இந்தியா-மாலைதீவு நாடுகள் இடையே மீண்டும் இணக்கமான சூழல் உருவாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, மாலைதீவுடன் இலகுவாக வர்த்தகம் செய்ய FTA எனப்படும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்கும் முயற்சிகளை இந்தியா தொடங்கியுள்ளதாக இப்போது தகவல் வெளியாகியுள்ளது. இருநாடுகளுக்கும் இடையிலான விரிசல் இப்போது படிப்படியாக நீங்கி வருவதாகத் தெரிகிறது. அதாவது மாலைதீவுடன் எளிமையாக வர்த்தகம் செய்வதற்கு ஏதுவாக FTA எனப்படும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்கும் முயற்சிகளை இந்தியா தொடங்கியுள்ளதாக மாலைதீவு அமைச்சர் முகமது சயீத் தெரிவித்துள்ளார்.

## விரிசல் நீங்குகிறது; விரைவில் இந்தியா புறப்படுகிறார் ஜனாதிபதி முய்சு



இதற்கான பேச்சுவார்த்தை இப்போது நடந்து வருகிறது.

இந்தியாவுடனான உறவு பாதிக்கப்பட்டதால் மாலைதீவின் பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது. மாலைதீவுக்குச் சுற்றுலா செல்வதைப் பல இந்தியர்கள் புறக்கணிக்க ஆரம்பித்தனர். இதனால் மாலைதீவு பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இதன் பின்னரே மாலைதீவு தனது போக்கை மாற்றியது. சமீபத்தில் கூட அந்நாட்டின் அமைச்சர், "இந்தியர்கள் மாலைதீவுக்குச் சுற்றுலா வர வேண்டும்" என வெளிப்படையாகவே கேட்டுக் கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. இரு நாட்டு உறவு இப்படி இருக்கும் இந்த நேரத்தில்தான் மாலைதீவுடன் இந்தியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள முயற்சி மேற்கொள்வதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதேசமயம் சமீபத்தில் நடந்த மாலைதீவு சுதந்திரதின விழாவில் கலந்து கொண்டு பேசிய அந்நாட்டின் அதிபர் முய்சு இந்தியாவுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் அவர் சில முக்கிய கருத்துகளைத் தெரிவித்தார்.

மாலைதீவு இந்தியாவுக்கு அளிக்க வேண்டிய கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சில தளர்வுகளை இந்தியா அறிவித்துள்ள நிலையில், அதற்கு மாலைதீவு அதிபர் நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியா மாலைதீவு இடையே உறவுகள் வலுவாக இருக்கும் என்றும், இரு நாடுகளும் விரைவில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் என்றும் நம்பிக்கை இருப்பதாக முய்சு தெரிவித்துள்ளார்.

**எஸ்.சாரங்கன்...**

# மாணவர்களின் கல்விக்கு விளையாட்டுத்துறை ஒருபோதுமே தடையாக அமைந்து விடாது!

அறிவை மையமாக கொண்ட சதுரங்க விளையாட்டும் உடல் உழைப்பை மையப்படுத்திய விளையாட்டாக கிரிக்கெட், கரப்பந்தாட்டம், ஓட்டப்பந்தயம், மெய் வல்லுநர் நிகழ்ச்சிகள் போன்றவற்றை குறிப்பிடலாம். பொதுவாக விளையாட்டை பார்ப்போமானால் இது ஒரு துறையாக வளர்ச்சி பெற முன்னதாக சிறிய மாணவர்கள் மற்றும் குழந்தைகள் பல்வேறுபட்ட விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறாக அவர்கள் தங்களின் நண்பர்களுடனும் சக பாடிகளுடனும் ஆடிப் பாடி விளையாடுவதன் மூலமாகவும் அவர்களிடம் ஓர் சீரான விருத்தி ஏற்படுகிறது.

இவ்வாறு விருத்தி ஏற்படுவதன் விளைவாக அவர்களின் அறிவுத்திறன் மேம்பட வாய்ப்பும் காணப்படுகிறது. ஆனால் தற்போது சில செய்திகள் பரவி வருகின்றன. கல்விக்கு விளையாட்டு தடையாக அமைந்து காணப்படுகின்றது என்பதே அச்செய்தி ஆகும். இது மட்டுமன்றி குறிப்பாக நோக்குவோமானால் பெண்களுக்கு பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வி மட்டுமே போதும் அவர்கள் விளையாட்டு துறையில் ஈடுபடக் கூடாது. அது அவர்களால் இயலாது அதுமட்டுமின்றி அது அவர்களும் கல்விக்கு தடையானதாக அமைந்துவிடும் என்பதேயாகும்.

இது ஒரு தவறான கூற்றாகவே கணிக்கப்படுகின்றது. நுண்ணறிவுடன் தொடர்பான சதுரங்கம் போன்றவை மாணவர்களின் சிந்தனைத் திறனை தூண்டுகிறது. அது மட்டுமின்றி உடல்



உழைப்புடன் தொடர்பான விளையாட்டுக்கள் மூலம் உடலுக்கு ஒரு புத்துணர்ச்சியான உடற்பயிற்சியும் கிடைக்கின்றது.

இவற்றின் பின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் உடல் உறுப்புக்கள் சீரான இயக்கத்துடன் காணப்பட்டு கல்விக்கு சிறந்த முறையில் கை கொடுக்கிறது. விளையாட்டுக்கள் கல்விக்கு சாதகமான வழியை ஏற்படுத்துகின்றதே தவிர பாதகத்தை அல்ல என புலப்படுத்துகின்றது. இவை மட்டுமன்றி பாடசாலைகளில் கல்வி செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் விளையாட்டை ஓர் பாடமாக வைத்து அதற்கென்று சிறந்த தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்து பயிற்சி வழங்குகிறது. இவ்வாறாக அரசாங்கம் விளையாட்டுக்கு ஊக்கம் அளிப்பதை நிரூபிக்கின்றது.

அது மட்டுமல்லாமல் உயர்தரப் பரீட்சையில் சிறிய வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் பல்கலைக்கழக வாய்ப்பு இழந்த மாணவர்களுக்கு கூட விளையாட்டுத்துறையுடன் தொடர்பான தேசிய, மாகாண, மாவட்ட சான்றிதழை முதன்மைப்படுத்தி குறைந்த வெட்டுபுள்ளியை உடையவர்களும் பல்கலைக்கழகம் மற்றும் ஆசிரிய பயிற்சி கலாசாலை சென்று தமது படிப்பை தொடர வழி செய்கிறது.

எனவே விளையாட்டு கல்விக்கு உதவுகின்றதே தவிர தடையாக அமையவில்லை.

ஒரு நபர் கல்வியை திறம்பட மேற்கொண்டு செல்ல வேண்டுமாயின் அவனது உடல், உள்ளம் போன்றன சீரானதாக கட்டுக்கோப்பாக காணப்பட வேண்டும் என விளையாட்டு வீரர்கள் குறிப்பிடுகின்றார்கள். எனவே சிறந்த கல்விக்கு விளையாட்டு மிக இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இவ்வாறாக கல்வியுடன் விளையாட்டுத் துறையிலும் சாதித்து இரண்டிலுமே சாதனை பெற்ற பல மாணவர்கள் காணப்படுகின்றனர். அந்த வகையில் 2024 மே மாதம் 31ம் திகதி க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளிலிருந்து கல்விக்கு விளையாட்டு தடை அல்ல என்பதற்கான பல எடுத்துக்காட்டுகளை இங்கு எடுத்துக்காட்ட முடியும். வடமாகாணத்தைச் சேர்ந்த மோகனதாஸ் லபிசன் எனும் மாணவன் விளையாட்டு கல்விக்கு ஒரு தடை இல்லை என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

கல்வி மற்றும் விளையாட்டு இரண்டையும் திறம்பட கையாண்டு இரண்டிலும் வெற்றி பெற்றுள்ளார். பாடசாலை காலங்களில் உதைபந்து, பூப்பந்து, மெய்வள்ளுநர் விளையாட்டுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர், அந்த மூன்று அணிகளிலும் குழுத் தலைவராகவும் இருந்துள்ளார். அதற்காக விருதினையும் பெற்றுள்ளார். அது மட்டுமல்லாது 2022 மற்றும் 2023 ஆண்டில் பாடசாலையில் வழங்கப்படும் சகலத்துறை விளையாட்டு வீரர் விருதினையும் பெற்றுக் கொண்டுள்ளார். வடமாகாணத்தின் முதல் தர பூப்பந்து வீரராகவும் இருந்துள்ளார். அத்தோடு வெளியாகிய பரீட்சையின் கணித பிரிவில் மூன்று ஏ சித்திகளைப் பெற்று பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முவின் என்னும் மாணவன் மல்யுத்த விளையாட்டில் சிறந்த வீர விருதினை பெற்று சாதனை படைத்துள்ளார். அது மட்டுமல்லாமல் மல்யுத்த விளையாட்டில் தங்கப் பதக்கத்தை இவர் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் குறிப்பிடும் விடயம் என்னவெனில் கல்விக்கு விளையாட்டு தடை இல்லை என்பதாகும். இரண்டையும் சரியான முறையில் கையாள்வதன் மூலம் இரண்டிலும் வெற்றி பெறலாம் என்பதே ஆகும்.

இதனைப் போன்றே பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் மாணவி சிரிமாதூரி சிந்தனைச் செல்வன் அண்மையில் அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின்படி மூன்று ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் நான்காம் இடத்தையும் இதேசிய ரீதியில் 22ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் தேசிய ரீதியில் இடம் பெற்ற போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்றவர். சவுதி அரேபியா ரியாத்தில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவாகி வெண்கலப் பதக்கத்தை வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

**முஹமட் அதீத் உஸாமா...**
இரண்டாம் வருட கல்வியல் சிறப்புக் கற்கை மாணவன்,
கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# நாட்டின் தலையெழுத்தை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு மக்கள் கைகளில்

## முன்னேற்றமா?.. வீழ்ச்சியா? சிந்தித்து முடிவெடுப்பது அவசியம்

**(பேருவளையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்)**



நாட்டின் தலையெழுத்து தற்போது மக்களின் கைகளிலேயே உள்ளதுடன் நாட்டை முன்னேற்றுவதா அல்லது மீண்டும் வீழ்ச்சியடையச் செய்வதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பலரும் போட்டியிடலாம். நெருக்கடியில் பொறுப்பேற்க எவரும் முன்வராத நிலையில், நாட்டை மீட்டு மக்களைப் பாதுகாத்த தலைவர் யார்? என்பதை சிந்தித்து நாட்டு மக்கள் ஆதரவளிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பேருவளையில் நேற்று (13) நடைபெற்ற 'இயலும் ஸ்ரீ லங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், இந்த நாடு இருந்த நிலையை அனைத்து மக்களும் அறிவர். அவ்வாறான சவாலுக்கு மத்தியில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிடின், இன்று கேஸ் சிலிண்டரின் விலை 25,000 ரூபாவாகவும் அரிசி 1 கிலோவின் விலை 1000 ரூபாவாகவும் அதிகரித்திருக்கும் என்பதை மக்கள் மறந்து விடக்கூடாது. இந்த நாடு மேலும் முன்னேற்றம் அடைவதா? அல்லது பின்னோக்கி செல்வதா? என்பது தொடர்பாக மக்களே தீர்மானிக்க வேண்டும். நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

இல்லாவிடின் மீண்டும் நெருக்கடியான வரிசை யுகத்துக்கே எமது நாடு செல்ல நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆசியாவின்...

இவ்வாறு தெரிவித்த அவர், நாட்டை மேம்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளதாகவும், நாட்டுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவேன் எனவும் உறுதியளித்துள்ளார்.

நாங்கள் கொள்கை ரீதியான அரசியல் கட்சி. அடுத்த 10 வருடங்களுக்குள் இலங்கையை ஆசியாவின் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் பொறுப்பை நிறைவேற்றுவோம் என உறுதியளிக்கின்றோம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

### பரீட்சையின்போது...

முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. ஏதேனும் அனர்த்த நிலை காரணமாக பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் மாணவர்களுக்கு சிரமம் ஏற்பட்டால் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. பாதிக்கப்படும் மாணவர்களுக்குத் தேவையான உடன் நடவடிக்கைகளை அதிகாரிகள் விரைந்து மேற்கொள்வதற்கு தயார் என தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்கள்

## (14.09.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
சில சமயங்களில் பணத்தட்டுப்பாடு வரலாம் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**ரிஷபம் :**
இந்த நேரத்தில் வீண் பிரச்சனைகள் வீடு தேடி வரும். உடன்பிறப்புகள், உங்கள் உடன் இருப்பவர்களும் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள்.

**மிதுனம்:**
நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். ஒரு வழியில் பொருள் இழப்புக்கள் கூட வரலாம். அதேநேரம் திடீர் வருமானம் வந்து மகிழ்ச்சி தரும்.

**கடகம்:**
நிழல் போல கடன் சுமை தொடரும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் உடல்நல குறைவால் அவதிப்படுவீர்கள்.

**சிம்மம்:**
நன்மைகள் உண்டாகும். என்றாலும் குடும்பத்தில் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும்.

**கன்னி:**
இக்காலத்தில் சுபகாரிய பேச்சுக்கள் கைகூடும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் உருவாகும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் தாமதம் ஏற்படும்.

**துலாம்:**
உங்களுக்கோ உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ மருத்துவத்திற்கான ஒரு பெரும் தொகையை செலவிட வேண்டிய நிலை ஏற்படும்.

**விருச்சிகம்:**
ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். கல்விக்காகவும் கலைக்காகவும் எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**தனுசு:**
குடும்பத்தில் பிள்ளைகளாலும் மற்றவர்களாலும் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது.

**மகரம்:**
ஆரோக்கிய தொல்லை அதிகரிக்கும். ஆதாயம் தரும் தகவல்கள் குறைவாகவே கிடைக்கும். திட்டமிட்டு எந்த காரியத்தையும் செயல்படுத்த முடியாது.

**கும்பம்:**
எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் திடீரென மாற்றம் வந்து கொண்டிருக்கும். வரவை காட்டிலும் செலவு கூடும்.

**மீனம்:**
பொருளாதாரத்தை பொறுத்தவரை அடிக்கடி பிரச்சினைகளும் குறுக்கீடுகளும் வந்து கொண்டே இருக்கும்.

## சஜித்தை ஆதரிக்கும் தீர்மானம்

# தமிழரசுக் கட்சியின் முடிவில் எவ்வித மாற்றமும் ஏற்படாது



ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது தொடர்பான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான குழு, வவுனியாவில் கூடியபோது, கட்சியின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை காலதாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் குறித்து அவருடன் பேசித் தீர்மானிப்பது தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் கூடும் குழு, மேற்படி விடயங்கள் குறித்து முன்னேற்ற மீளாய்வைச்செய்து, அதுபற்றி மக்களுக்கு அறிவிக்குமெனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் அறிக்கையொன்றினூடாக குறிப்பிட்டுள்ளார்.

## BASL–JICA பிரச்சினை

# சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் இராஜினாமா





இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் (BASL) தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்யா நவரத்ன உடன் அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்ச்சைக்குரிய BASLJICA பிரச்சினையை விசாரிப்பதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் 5 பேரைக்கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இக்குழுவில், தலைவர் கௌசல்யா நவரத்ன, JICA உடன் சட்டத்தரணிகள் சங்கம் (BASL) செய்துகொண்ட ஒப்பந்தம் தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் செயற்படத் தவறியமை கண்டறியப்பட்டுள்ளது.

### எல்லையற்ற வருமானத்தை...

வெளியிடப்பட்டுள்ளது. இறப்பர் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களால் பெறப்படும் 1 கிலோ இறப்பருக்கு மேலதிகமாக இந்த மேலதிக கொடுப்பனவு செலுத்தப்படவேண்டும். அதன்படி, தொழிலாளியின் உற்பத்தித்திறனைப் பொறுத்து, நாளாந்தம் வரையறை இல்லாமல் சம்பளத்தை பெற்றுக் கொள்ளலாம். இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பன செலுத்துவதற்கான குறைந்த பட்ச சம்பளமாக 1,350 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது. இந்த சம்பள உயர்வு செப்டெம்பர் 10ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

### செல்வராசா கஜேந்திரன் எம்பி...

ஈடுபட்டிருந்த செல்வராஜா கஜேந்திரனை பொலிஸார் கைதுசெய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

### தனிநபர் வருமான...

வருமானத்தை அதிகரிப்பதற்கான ஒரு பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகவே வரி அறிவிடுவது கையாளப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் (EFF) வேலைத் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.3% ஆன முதன்மை வரவு செலவுத் திட்ட மேலதிகத்தை அடைவதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு 2025 ஆம் ஆண்டளவில் அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 14% ஆக உயர்த்த கணிசமான வரி வருவானம் தேவைப்படும்.

அடிப்படை சீர்திருத்தங்களில் ஆண்டுக்கு தலா 1.2 மில்லியன் ரூபா வரி இல்லாத வரம்பு, தலா 500,000 ரூபா வரி இடைவெளி மற்றும் வரி விகிதம் குறைந்தபட்சம் 6% ஆகவும் அதிகபட்சம் 36% ஆகவும் இருக்கும். எவ்வாறாயினும், குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கை தனது நிதி இலக்குகளை அடையத் தொடங்கிய 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அரசாங்கம் முடிவு செய்தது.

அதன்படி, வரி அளவை 500,000 ரூபாவிலிருந்து 720,000 ரூபாவாக உயர்த்தவும், வரி இல்லாத வரம்பை 1.2 மில்லியனாக வைத்திருக்கவும், அதிகபட்ச வரி விகிதம் 36% உட்பட அனைத்து மட்டங்களிலும் விளிம்பு வரி விகிதங்களைப் பராமரிக்கவும் அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ததைத் தொடர்ந்து, 2025 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் புதிய வரி அமுலாக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

அதிக வரிச்சுமையைக் கொண்ட வரி வரம்புகளுக்கு மத்தியிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த வரிச் சீர்திருத்தத்தின் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மாதத்துக்கு 150,000 ரூபா வருமானம் பெறும் ஒரு நபரின் வரியில் 14% குறைப்பைப் பெறுவார். அதே சமயம் அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு இன்னும் வரையறுக்கப்பட்ட நிவாரணம் கிடைக்கும்.

இந்த சீர்செய்தலினூடாக இந்நாட்டின் மொத்த வருமானத்தில் ஏற்படும் தாக்கம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.07% என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கருத்திற்கொண்டு இந்த நிவாரணம் வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த உத்தேச திருத்தங்கள் நிதி ஒழுக்கத்தை பேணுவதற்கான தேவையையும், குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான மக்களின் கோரிக்கையையும் நிறைவேற்றும் என நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

### 100 ஆண்டுகள் பழமையான மருத்துவ...

பங்களாதேஷ் தவறியிருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2022 ஆம் ஆண்டு இலங்கையிலும் அவ்வாறானதொரு நிலையே ஏற்படவிருந்ததாகவும் அதனை தானே தலையிட்டு தடுத்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

'ஆரோக்கியமான எதிர்காலத்துக்காக வைத்தியர்கள்' என்ற தொனிப்பொருளில், பத்தரமுல்லை வொர்டஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று (12) நடைபெற்ற வைத்தியர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, கடந்த இரண்டு வருடங்களில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இந்நாட்டின் வைத்தியர்கள் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக ஆற்றிய சேவைக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் வேளையில், ஒவ்வொருவருக்கும் உரிய பங்கு வழ ங்கப்படும் என்பதோடு, வைத்தியர்களின் எதிர்பார்ப்புக்களையும் சம்பளத்தையும் சிறந்த வகையில் பெற்றுக்கொடுப்பதே தனது இலக்காகும் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய சுகாதாரத் தரநிலைகளை உருவாக்கி அரச மற்றும் தனியார் சுகாதாரத்துறைகளை உள்ளடக்கிய விரிவான சுகாதார சட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானித்திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்போது, பொருளாதாரம் மீண்டு வந்ததன் பின்னர் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பு, தமது தொழில் அந்தஸ்து நீதித்துறை நிகரானதாக மாறியிருப்பதாக வைத்தியர்கள் சுட்டிக்காட்டினர்.

அதுகுறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, உடனடிச் சீர்த்திருத்தங்களை செய்வதா? அல்லது படிப்படியாக திருத்தங்களை செய்வதா? என்பது குறித்து அவதானம் செலுத்த வேண்டியிருப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

எவரும் முன்வராதபோது நாட்டை பொறுப்பேற்று சுமூகமான நிலைமைக்கு கொண்டு வர என்னால் முடிந்தது. அரச அதிகாரத்தில் வெற்றிடம் ஏற்பட ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. அதிகாரம் ஒரு தரப்பிடமிருந்து மற்றுமொரு தரப்பினருக்கு சுமூகமாக மாற்றப்படவேண்டும். நாடொன்றின் அரச அதிகாரம் வெற்றிடமாவது பாரிய துயரங்களுக்கு வழி வகுக்கும்.

பங்களாதேஷில் இன்று அதுவே நடந்திருக்கிறது. அரச அதிகாரத்தில் இடைவெளி ஏற்படுவதற்கு இடமளித்ததால், அந்த இடைவெளி நிறைவேற்ற முடியாமல்போயுள்ளது. ஒவ்வொருவரும் தன்னிச்சையான விருப்பங்களுக்கமைவாக அந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றனர். இனிவரும் காலங்களில் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டுச் செல்லவேண்டும். அதிக வருமானம் ஈட்டவேண்டும். அதற்காக மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். அதனால் உங்களுக்கான சம்பளமும் அதிகரிக்கும்.

இந்த இலக்கை அடைய, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்லவேண்டும். நமது நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி வெளிநாட்டிலிருந்து வரும் நோயாளிகளுக்கும் சுகாதார சேவைகளை வழங்குவதன் மூலம் அதிகப்படியான வருமானத்தை ஈட்டுவதை இலக்கு வைத்து முழு சுகாதார சேவையும் செயற்பட வேண்டும்.

இந்த அணுகுமுறை சுகாதார சேவையின் சிக்கல்களைத் தீர்க்கவும், காலப்போக்கில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 7 - 8% பங்களிப்பை வழங்கவும் முடியும்.

கிராமப்புற வறுமையை ஒழிக்கும் நோக்கில் நாட்டின் விவசாயத்தை நவீனமயமாக்க திட்டமிட்டுள்ளோம். விளைச்சலை அதிகப்படுத்தும் வகையிலான புதிய விவசாய முறைமைகளை அறிமுகப்படுத்த தீர்மானித்திருக்கிறோம்.

புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்குதல், டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு மாறுதல் மற்றும் நிலையான வலுசக்தி பயன்பாடு குறித்தும் கவனம் செலுத்தியிருக்கிறோம். அதனால் இலங்கையின் பொருளாதாரத்தில் குறுகிய காலத்தில் துரிதமான மேம்பாட்டை காணமுடியும்.

மேலும், பெண்களை வலுவூட்டும் சட்டம் மற்றும் சமூக நீதி தொடர்பான ஆணைக்குழு மூலம் இந்த நாட்டில் பெண்களை வலுவூட்ட நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நாங்கள் தயாரித்துள்ள புதிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை முழுமையாக நடைமுறைப்படுத்த இன்னும் ஒரு வருடமாகுமென எதிர்பார்க்கிறேன்.

பிரதேச சபைகள் மற்றும் மாகாண சபைகளில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும். இதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப்பின் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட 87 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

'இயலும் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அனைத்துத் துறைகளையும் ஒன்றிணைத்து புதிய இலங்கையை உருவாக்குவதே எனது நோக்கமாகும். இந்த முயற்சி நம்மை மட்டும் சார்ந்ததல்ல. இதில் இந்த நாட்டின் இளம் தலைமுறையினருக்கு முக்கிய பங்கு உள்ளது.

நாடு முழுமையாக இயல்பு நிலைக்குத் திரும்ப இன்னும் ஒரு வருடம் அல்லது அதை விட அதிக காலம் தேவைப்படும். கடினமான சூழ்நிலைகளிலும் பொதுமக்களுக்கு சுகாதாரத் துறையில் நீங்கள் வழங்கிய அத்தியாவசிய சேவையை பாராட்டுகின்றேன். நீங்கள் அரசாங்கத்துடன் உடன்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன, உடன்படாத சந்தர்ப்பங்களும் உள்ளன.

ஆனால், நீங்கள் இந்த நாட்டுக்கு ஒரு முக்கியமான சேவை செய்கிறீர்கள். பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும்போது உங்களுக்கு சிறந்த வாய்ப்புகளையும் சம்பளத்தையும் வழங்குவதே எனது குறிக்கோள்,

இதன்போது அனைவருக்கும் உரிய பங்கு கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

### வாகன இறக்குமதி...

மேம்படுத்தவும் அரச வருமானத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், வாகன இறக்குமதியானது நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அந்த நிலைமையை முகாமைத்துவம் செய்ய வாகன இறக்குமதிக்கு மேலதிக சுங்க வரி விதித்தல் போன்ற நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையும் கையெழுத்திட்டுள்ள பெரிஸ் சாசனத்தில் உள்ளடங்கிய 'தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDCs)' பூர்த்தி செய்வதற்கான தற்போதைய அர்ப்பணிப்பும், 2050 ஆம் ஆண்டுக்குள் 'பூஜ்ஜிய உமிழ்வு நிலையை' அடைவதற்கான தற்போதைய இலக்கும், இந்த முடிவை எடுப்பதில் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

புதிய வாகன இறக்குமதிக் கொள்கையின் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, Euro 4 முதல் Euro 6 வரையிலான தரநிலைக்கு மாறுவதன் மூலம் வாயு உமிழ்வு தரநிலைகளுக்கு இணங்குவதும் அவசியமாகும்.

இதன் மூலம் மின்சக்தி வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதையும் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2029 ஆம் ஆண்டளவில், பெற்றோல் அல்லது டீசலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்வது தடைசெய்து,

தற்போதுள்ள வாகனங்களை மின்சார வாகனங்களாக மாற்றுவதும் ஊக்குவிக்கப்படும்.

மேலும், சிறப்பு செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பத்து ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கலாம்.

இறக்குமதியாளர்கள் இந்த வாகனங்களை இறக்குமதி செய்த 90 நாட்களுக்குள் பதிவு செய்து விற்பனை செய்ய வேண்டும். மற்றும் தாமதத்துக்கு அபராதம் விதிக்கப்படும்.

வாகன மற்றும் உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்பவர்கள், வாகன ஒன்றிணைப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஒழுங்குபடுத்துவதற்காக வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப்படும். இலங்கை, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கை அடைய வேண்டிய நிதி இலக்குகளுக்கு ஆதரவு வழங்கி, படிப்படியாக இறக்குமதியை மீண்டும் தொடங்குதல் மற்றும் சுங்க வரி மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது,

### ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு...

இது தொடர்பான முறைப்பாட்டு மனுவை எதிர்வரும் 25ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வடக்குக்கான ரயில் சேவை...

சிந்தக ஜயசேகர தெரிவித்தார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில், அநுராதபுரம் மஹவ பகுதியின் நிர்மாணப் பணிகள் இவ்வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர், ரயில் சேவைகள் இன்று (14) முதல் ஆரம்பிக்கப்படுமென ரயில்வே திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த ஒரு தடத்தை கொண்ட ரயில் பாதை புனரமைக்கப்பட்டதன் பின்னர், கொழும்பிலிருந்து காங்கேசந்துறைக்கு செல்வதற்கு ஏழரை மணித்தியாலங்கள் தேவைப்பட்ட நேரம் தற்போது ஐந்தரை மணித்தியாலங்களாகக் குறைக்கப்படுமெனவும் மணிக்கு நூறு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில் பயணிக்குமெனவும் சிந்தக ஜயசேகர மேலும் தெரிவித்தார்.

### பால் மா கொள்வனவுக்கு...

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் என்ற ரீதியில் தானும் இணைந்து நேற்று முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ச.தொ.ச ஊடாக ஹைலண்ட் பால்மாவை விற்பனை செய்யும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார். முன்னர் நட்டத்தில் இயங்கி வந்த அரச நிறுவனமான மில்கோ நிறுவனம், தற்போது அது மாற்றமடைந்து இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளதாகவும், நாளாந்த பால் சேகரிப்பு 50,000 லீற்றரிலிருந்து இரண்டு இலட்சமாக அதிகரித்துள்ளதாகவும் நேற்றைய (13) அமைச்சரவைக் கூட்டத்தில் தாம் சுட்டிக்காட்டியதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். குறிப்பாக, பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் உற்பத்தி, பால் கொள்முதல் செய்து வந்த பெரும்பாலான நிறுவனங்கள் தற்போது பால் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட்டதனால், பால் பண்ணையாளர்களுக்கு சொந்தமான பாலை மில்கோ நிறுவனமே கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மில்கோவின் தினசரி உற்பத்தியும் அதிகரித்துள்ளதோடு, இரண்டு இலட்சம் மெற்றக்தொன் ஹைலேண்ட் பால் மா நிறுவனத்திடம் கையிருப்பிலுள்ளது. மில்கோ நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் ஹைலண்ட் பால் மாவின் விலையும் கடந்த வாரம் முதல் 400 கிராம் பாக்கெட் ஒன்றின் விலை 75 ரூபாவாலும் 01 கிலோ பக்கற் ஒன்றின் விலை 190 ரூபாவாலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### நாட்டில் செல்வந்தர்கள் அதிக...

சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இலங்கை, தமது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தாததையடுத்து சர்வதேச நாணய நிதிய சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தநிலையில், மக்கள் மீதான வரிச்சுமையை இலகுபடுத்துவதற்கான வழிகளைக் கண்டறிய சர்வதேச நாணய நிதியத்துடன் தமது கட்சி ஏற்கனவே கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாக சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான தற்போதைய உடன்படிக்கையில், "அடிப்படை மாற்றங்கள்" இருக்க வேண்டும், அவை மிகவும் "மனிதாபிமான முறையில்" மக்கள் மீதான சுமை குறைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் கூறினார்.

செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பாகவே பார்க்கப்படுகிறது.

ரணில் தரப்பினர், முக்கிய பொருளாதார துறையினரை மேம்படுத்தியுள்ளனர். ஆனால் அவற்றின் விளைவுகள் இன்னும் பல சாதாரண மக்களை சென்றடையவில்லையென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் விமர்சித்துள்ளார்.

மேலும், ஏற்றுமதி சார்ந்த, அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் மூலம் பிரச்சினைகளிலிருந்து வெளிவருவது என்பது தனது கொள்கையாகும் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

### கட்சியை நம்பிய தமிழ் மக்களுக்கு...

ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது இவ்வாறு தெரிவித்த அவர், நாட்டில் பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும்.பல்வேறுபட்ட நெருக்கடிகளிலிருந்த நாட்டை மீட்டு தற்போதைய நிலைக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே, அவருக்கே வாக்களிக்க வேண்டும் என அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்

# கிழக்கின் குரல்



## விழிப்புணர்வு ஊர்வலம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

காரைதீவு கல்விக்கோட்டத்திற்குட்பட்ட கண்ணகி இந்து வித்தியாலயத்தில் உலக எழுத்தறிவு தினத்தினை முன்னிட்டு மாணவர்களினால் விழிப்புணர்வு ஊர்வலமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை அதிபரின் வழிகாட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி விழிப்புணர்வு ஊர்வலத்தில் பதாதைகளை ஏந்திய வண்ணம் மாணவர்கள் ஊர்வலமாக சென்றனர்.

இதன்போது ஆசிரியர்களும் மாணவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் விசேட தேவைக்குரிய நபர்களுக்கான அடையாள அட்டை விநியோகம்





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பில் விசேட தேவைக்குரிய நபர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் (13) நடைபெற்றது. உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எ.எம் சுபியானின் ஒழுங்குபடுத்தலின் கீழ் விசேட தேவைக்குரிய நபர்களுக்கான அடையாள அட்டை வழங்கி வைக்கப்பட்டது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் விசேட தேவைக்குரிய நபர்கள் தமது வாக்கினை வழங்குவதற்கான விசேட அடையாள அட்டைகள் முதல்முறையாக வழங்கப்பட்டது.

விசேட தேவைக்குரிய நபர்களுக்காக அடையாள அட்டைகள் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட 5 மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதற்கட்டமாக 386 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதுடன் 10 வருட காலம் செல்லுபடியாகக் கூடிய வகையில் இவ் அட்டைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 8310 மேற்பட்ட விசேட தேவைக்குரிய நபர்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி ச. கோணேஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சம்மாந்துறை மின்மினிக்கு ஜனாதிபதியால் தேசிய விருது!



(அம்பாறை மத்திய நிருபர்)

சம்மாந்துறை அல்அர்சத் மகா வித்தியாலயத்தில் தரம் 8 கல்வி கற்கும் மின்மினி மின்ஹாவுக்கு கிளைமேட் சேஞ்ச் ஆப் ஸ்ரீ லங்கா CLIMATE CHANGE OF SRI LANKA 2024 எனும் தேசிய விருதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி கௌரவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு வாக்களிக்க முஸ்லிம் மக்கள் முன்வந்துள்ளனர்

(ஒலுவில் விசேட நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முஸ்லிம் மக்கள் வாக்களிக்க முன்வந்துள்ளதாக தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆரதவு தெரிவித்து அக்கரைப்பற்றில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார பின்னடைவினால் பாதிக்கப்பட்டிருந்த நாட்டை மீட்டெடுத்து குறுகிய காலத்திற்குள் வளமான நாடாக மாற்றியமைத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் நாட்டை முன்னெடுத்துச் செல்ல நாட்டு மக்கள் வாக்களிக்க முன்வந்துள்ளனர்.



எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த காலக்கட்டத்தில் பல சவால்கள் காணப்பட்ட சூழ்நிலையில் சிறப்பான சூழலை உருவாகி உள்ளதை எல்லோரும் அறிவோம்.

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்து இருளில் மூழ்கியிருந்த போது நாட்டை மீட்டெடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. நாடும், சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்தி பாதைக்கு மீள கட்டியெழுப்பியுள்ளார்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் பாசாறையில் வளர்க்கப்பட்ட நாங்கள், அவரது மறைவுக்குப் பின்னர் தேசிய காங்கிரஸ் கட்சியை உருவாக்கி அவரால் விட்டுச் சென்ற பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றோம். அந்த வகையில் தேசிய காங்கிரஸ் முஸ்லிம்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

மக்கள் எப்போதும் தேசிய காங்கிரஸின் பக்கமே இருக்கின்றார்கள். இதனை பொறுத்துக் கொள்ள முடியாத சில வங்குரோத்து அரசியல்வாதிகள் எம்மை வீழ்த்த நினைக்கின்றார்கள். நாங்கள் மக்களின் மனதில் வாழ்கின்றோம்.

இன்று சில முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம்களுக்கு சிறந்த அரசியல் பாதையை காட்ட முடியாமல் இனவாதத்தை பேசித் திரிவதாக அவர் தெரிவித்தார்.

## கரையோர பாதுகாப்பு விசேட வேலைத்திட்டம்



கரையோர பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் நோக்குடன் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது, கடல் சூழல் அதிகாரசபை மற்றும் 'ஜன தாக்சன்' அமைப்புடன் இணைந்து புதிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய களுவாஞ்சிகுடி கிராமசேவகர் பிரிவின் கடற்கரையோரங்களை அண்டிய பிரதேசங்களில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் தூய்மைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந் நிகழ்ச்சித்திட்டமானது கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும்.

கிழக்கு கரையோரங்களை தூய்மையாக பேணுதல் எனும் திட்டத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் இது அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் பிரதேச பொது மக்களுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடல் சார் சூழல் அதிகார சபை மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் கரையோரங்கள் சுத்தம் செய்யப்பட்டன. மேலும் இந் நிகழ்வினை பிரதேச செயலக கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான யோ. நிசந்தராசன் மற்றும் ஆ. ஜெகரூபன் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீ முருகனில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா





( காரைதீவு குறூப் நிருபர் )

சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா நேற்று நாவிதன்வெளி மத்திய முகாம் ஸ்ரீ முருகன் தமிழ் மகா வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து மத்திய முகாம் ஸ்ரீ முருகன் தமிழ் மகா வித்தியாலயத்தில்இவ் விழாவை நடாத்தியது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் எஸ்.திருச்செல்வம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சைவப் புலவர் வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சுவாமியின் திருவுருவப்படங்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.

இது பதினைந்தாவது பாடசாலை நிகழ்ச்சி திட்டமாகும்.

## கிண்ணியாவில் ரூ.3 கோடி செலவில் மாடிக் கட்டடம் திறந்து வைப்பு



(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலை கிண்ணியா வலயக் கல்வி அலுவலகப் பிரிவிலுள்ள காக்காமுனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ரூ. 3 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத் திறப்புவிழா நேற்று (13) பாடசாலை அதிபர் எம்.என்.நஸீம் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் W.E.M.W.G.திஸாநாயாக்க முதன்மை அதிதியாக கலந்து கொண்டு இதனை திறந்து வைத்தார்.

இக்கட்டடம் முஸ்லிம் எயிட் (UK) நிறுவனத்தின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டதோடு இக்கட்டடம் எட்டு வகுப்பறைகளை கொண்டமைந்ததாக அமைத்துள்ளது.

இந்நிகழ்வில் ஐக்கிய இராச்சியத்தின் முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹாலிட் ஜாவிட், ஐக்கிய அமெரிக்காவின் முஸ்லிம் எயிட் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷார் அஸீஸ், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஏ.சி.பைஸர்கான் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வறா நளீம் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தனர்.

## இளையோர், வளர்ந்தோர் பங்குபெறும் சித்திரப்போட்டி

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

இளையோர் வளர்ந்தோர் ஒன்றிணைத்து பங்குபெறும் சித்திரப் போட்டியும் காட்சிப்படுத்தலும் இலங்கை தேசிய சமாதானப் பேரவை மற்றும் எகட் ஹரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் (12) இடம் பெற்றது.

கலை வழியாய் சமாதானம் வளர்ப்போம் சமூகத்தில் சுதந்திரம் சமாதானம் சகவாழ்வு போன்ற உயரிய பண்புகளை மையப்படுத்தி சித்திரங்கள் வாயிலாக பிரிதிபலிப்போம் எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

செங்கலடி பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட மக்களிடம் சகோதரத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன.



இதன் போது வரையப்பட்ட கண்கவர் ஓவியங்கள் காந்திப் பூக்காவில் மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் ஏகட் ஹரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்தந்தை எஸ்.எல். ஜெய நிக்சன் அடிகளார், இலங்கை சமாதான பேரவையின் கண்காணிப்பிற்கும் மதிப்பாய்விற்குமான உத்தியோகத்தர் என். கிரிஸ்ணகுமார், வண்ணாத்து பூச்சி பூங்கா நிறுவனத்தின் வளவாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் ஜனாதிபதி வெற்றிபெறுவார்

### திருக்கோவில் கூட்டத்தில் இராஜேஸ்வரன் நம்பிக்கை



(காரைதீவு குறூப் நிருபர்)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வெற்றி பெறுவார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

எமது மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்கள் பல காலமாக புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அதனை சீர் செய்து தருவார் என்ற நம்பிக்கை உள்ளது.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவான பிறகு வரிசை யுகத்துக்கு முடிவுகட்டினார். பொருளாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை வகுத்தார். இன்று ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகிறது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. சுற்றுலாப்பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. எமது அரச தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

அவருக்கு நாம் அனைவரும் நன்றிகள் செலுத்த வேண்டும். அதற்கு ஒரேயொரு வழி நமது பொன்னான வாக்குகளை வீணாக்காமல் அவருக்கு அளிப்பதே.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டை ஆளவேண்டியது கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவரின் தலைமைத்துவம் இருந்தால் இந்நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோற்றால் அது தனிமனிதனுக்குரிய தோல்வி அல்ல, நாட்டின் தோல்வியாகும். அதுமட்டுமல்ல, மீண்டும் வரிசை யுகம் உருவாகும்.

இது தேர்தல் காலம் என்பதால் சில ஜனாதிபதி வேட்பாளர்கள் அதை வழங்குவேன், இதை வழங்குவேன் என உறுதிமொழி வழங்கலாம். ஆனால் எதுவும் நடக்கப்போவதில்லை. நடைமுறைக்கு சாத்தியமான உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். எனவே, அவர் எமது மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார்.

இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் தமது வாக்குகளை வீணாக்காமல் நூறு வீதம் ரணிலுக்கு அளித்து பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

## அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் செயலமர்வு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் அம்பாறை மாவட்டத்திற்கான செயலமர்வு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி முஹமட் தலைமையில் நிந்தவூர் பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பங்குபற்றுனர்களாக முன்னாள் உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் திட்ட முகாமையாளர் பேரம்பலம் ரேணுகா, வளவாளராக சட்டத்தரணி எம்.எம்.அஸாட் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பான முறையில் விரிவுரை வழங்கினார். இதன்போது பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரதிகள் பங்குபற்றியவர்களுக்கு வழங்கப்பட்டது.

# வடக்கின் உதயம்

## கத்திக்குத்துக்குள்ளான நபர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

**(யாழ் . விசேட நிருபர் )**

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியரும், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான கந்தப்பு கிரிதரன் எனும் நபர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டதில் குறித்த நபர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் வசிக்கும் வீடு தொடர்பில் மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் நீண்டகாலமாக பிரச்சினை நிலவி வந்துள்ளது.

அந்நிலையில் மற்றைய தரப்பினர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டையடுத்து, குறித்த நபரை பொலிஸ் நிலையம் அழைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளனர்.

பொலிஸாரின் அத்துமீறல்கள் தொடர்பில் காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு சென்று முறையிட்ட பின்னர் வீடு திரும்பி சில மணி நேரத்திற்குள் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த நால்வர் அடங்கிய வன்முறை கும்பல் தாக்குதலை மேற்கொண்டு, அவரை கத்தியால் பல தடவைகள் குத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்திருந்தவரை அயலவர்கள் மீட்டு நோயாளர் காவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

## யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை வாக்குச்சாவடியாக பயன்படுத்துவதை தவிர்க்கவும்

### சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை



யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை, வாக்குச்சாவடியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் என்ற உன்னத புருஷரைச் சைவத் தமிழ் உலகம் என்றும் நினைவில் கொள்ளும் வகையிலும் அவர் தம் கொள்கைகளை பேணும் நினைவாலயமாகவும் ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டது.

பொதுச் செயற்பாடுகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் இந்த மண்டபம் கடந்த காலங்களில் பயன்படுத்தப் பட்டுவந்த போதிலும் அதன் புனிதத் தன்மையைப் பேண வேண்டும் என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

ஆன்மிக ஸ்தலமாக அம்மண்டபம் போற்றப்படவேண்டிய தன்மை மற்றும் ஆசாரங்கள் பேணப்பட வேண்டியதன் அவசியம் முதலான இன்னோரன்ன காரணங்களால் கடந்த காலத்து நிர்வாகங்களோடு முரண்பட்டு இன்று வழக்கில் இக் கலாசார மண்டபம் உள்ளது.

தற்போது, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதிக கவனம் எடுத்து இந்த மண்டபத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

எனவே தேர்தல் முதலான பொது விடயங்களில் கடமைக்கு அமர்த்தப்படுகின்றவர்களுக்கு இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவதில் நிச்சயம் அசௌகரியம் ஏற்படும்.

அது இக்கலாசார மண்டபத்தின் புனிதத்தையும் சட்டதிட்ட நடைமுறைகளையும் விமர்சனத்திற்கு உள்ளாக்கும்.

எனவே, தயவுசெய்து இத்தகைய நிலைமையினைக் கருத்திற்கொண்டு இந்த மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்தும் செயற்பாட்டைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என அவர் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவ்வறிக்கையின் பிரதிகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம் உதவித் தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் செயலகம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக பிரதேசவாதத்தை கையில் எடுத்துள்ளார்கள்

**(யாழ். விசேட நிருபர் )**

கிழக்கு மாகாணத்தில் பிரதேசவாதத்தை முன்னிறுத்தி தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக பிரசாரம் செய்கிறார்கள். இவ்வாறு அவர்கள் பேசி கிழக்கு மாகாணத்தை சிங்களவர்களிடம் பறிகொடுக்க முயல்கின்றார்கள். இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில். நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக, டக்ளஸ் தேவானந்தா, மட்டக்களப்பிலிருந்து பிள்ளையான், வியாழேந்திரன் போன்றோர் பேசி வருகின்றனர்.

எனது கேள்வி கிழக்கில் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இருந்தீர்கள், உங்களால் மேய்ச்சல் தரை பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. இப்பகூட நீங்கள் அது தொடர்பில் பேசக்கூட விரும்பவில்லை. குறைந்தபட்சம் கன்னியா வெந்நீரூற்றை காப்பாற்ற முடிந்ததா? கல்முனை பிரதேச சபையை தரமுயர்த்த முடிந்ததா ?

அதேபோன்றே வடக்கில் கடற்றொழில் அமைச்சராக இருந்தும் இன்று வரை இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த முடிந்ததா? எங்களுடைய மீனவர்களுக்கு என்ன செய்தீர்கள்? கடற்றொழில் அமைச்சராக இருந்து எமது மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. ஆனால் இப்போதும் மீண்டும் ரணில் ஜனாதிபதியாக வரவேண்டும் என கோருகின்றார்கள். இது அவர்களின் சட்டைப் பையை நிரப்பும் செயல்.

பிரதேச வாதங்களை முன்னிறுத்தி கிழக்கில் பிரசாரம் செய்கிறார்கள். அவர்களுக்கு வடக்கு, கிழக்கு இணைப்பை பற்றி கூட அக்கறை இல்லை.

பறிபோகும் கிழக்கை மீட்க இவர்கள் என்ன செய்தார்கள். தற்போதும் பிரதேச வாதங்களை பேசி கிழக்கை பறிகொடுக்க முயல்கின்றனர். இதனை கிழக்கு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே இலங்கையில் வாழும் அத்தனை தமிழ் மக்களும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என தெரிவித்தார்

## நாடு மேலும் அபிவிருத்தி அடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும்

### மன்னாரில் இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான்



**(மன்னார் குறுப்நிருபர்)**

நாடு மேலும் அபிவிருத்தியடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அனைவரும் ஆதரிக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வன்னி தேர்தல் தொகுதியில் அதி கூடிய வாக்குகளைப் பெற்றுக்கொள்வார். அதேபோன்று தேசிய ரீதியிலும் அதிகூடிய வாக்குகளைப்பெற்று ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவார் என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை (13) மதியம் மன்னார் பஜார் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகரத்தைப் பொறுத்தமட்டில் வியாபாரிகளும், மக்களும், கல்வியாளர்களும் மிகவும் தெளிவாகவே இருக்கின்றார்கள். இந்த நாடு, தற்போதைய நிலையிலிருந்து சற்று முன்னேறி பொருளாதாரம் மேம்பட வேண்டுமாக இருந்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளதோடு, மீண்டும் ஜனாதிபதியாக வருவார் என நம்பிக்கையும் தெரிவித்துள்ளனர். அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். மக்கள் உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றனர்.

மக்களின் அமோக வரவேற்பு எங்களுக்கு கிடைக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வன்னி தேர்தல் தொகுதியில் அதி கூடிய வாக்குகளை பெற்றுக் கொள்வார். அதே போன்று தேசிய ரீதியிலும் அதி கூடிய வாக்குகளைப் பெறுவார்.

## பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நகர சபை பெண் ஊழியர் மீது தாக்குதல்

**(தலைமன்னார் விஷேட நிருபர்)**

மன்னார் நகர சபை எல்லைக்குள் உள்ள வீடுகளில் நிலுவையிலுள்ள ஆதன வரிகள் தொடர்பாக செயல்பட்ட பெண் ஊழியர் ஒருவர் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்ற போதும் உதவி தேர்தல் ஆணையாளரின் வேண்டுகோளுக்கிணங்க இக்கவனயீர்ப்புப் போராட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டது.

மன்னார் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடுகளில் நிலுவையிலுள்ள ஆதன வரிகளை அறவிடும் பணியில், மன்னார் நகர சபை பெண் ஊழியர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை (12) ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது வன்னி ரெலோ பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கும் வீட்டுக்கு நிலுவையிலுள்ள ஆதன வரியை சேகரிக்கச் சென்றபோது இவ் அலுவலகத்துக்குப் பொறுப்புவாய்ந்தவருக்கும் அங்கு சென்ற பெண் ஊழியருக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டதாகவும், இதனால் ஆத்திரமடைந்த ரெலோ அலுவலக பொறுப்பாளர், அங்கு சென்ற பெண் ஊழியர் ஒருவரின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டதாகவும் தங்கள் கடமைக்கு குந்தகம் ஏற்படுத்தியதாகவும் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டைக் கண்டித்து, நேற்று வெள்ளிக்கிழமை (13) காலை மன்னார் நகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மன்னார் மாதர் ஒன்றியம் மற்றும் பொதுமக்களும் மன்னார் நகர சபைக்கு முன்னால் பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை, நடாத்தினர். இவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில் 'பெண்கள் மீது வன்முறை காட்டும் கோழைகள் தண்டிக்கப்பட வேண்டும்' 'பண பலமிருந்தால் அரச அலுவலரை அடிப்பது சாதாரண விடயமா?' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தங்கள் கைகளில் ஏந்தியிருந்தனர்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் உதவி தேர்தல் ஆணையாளர் வீ. சிவராசா போராட்டக்காரர்களை நோக்கி தற்பொழுது தேர்தல் காலமாக இருப்பதால் இவ்வாறான போராட்டங்கள் நடாத்த தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆகவே இதை கைவிட்டு உடன் கலைந்து செல்லுமாறு அவரால் கேட்டுக் கொண்டதுக்கிணங்க இந்தப் போராட்டம் உடன் இடை நடுவில் கைவிடப்பட்டது.



மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் சங்காபிஷேகம் மணவாளக்கோல தண்டிகை உற்சவம் 12.09.2024 அன்று மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றதோடு, அறநெறி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வும் இடம்பெற்றது.

## தேர்தல் கண்காணிப்பு குழுவினர் அரசாங்க அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் ANFREL (Asian Network Free Elections) தேர்தல் கண்காணிப்பு குழுவினர் (13.09.2024) யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் முன்னாயத்த செயற்பாடுகள் தொடர்பாகவும் வாக்களிப்பு நிலையங்கள், வாக்கெண்ணும் நிலையங்கள் மற்றும் நிறைவு பெற்ற அஞ்சல் வாக்களிப்பின் விபரங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் ANFREL தேர்தல் கண்காணிப்பு குழுவின் சர்வதேச கண்காணிப்பாளர் ஹசன் மொகமட் மற்றும் எஸ். கலாராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் ஏற்பாட்டில் விற்பனை கண்காட்சி!



கிண்டர்நோத்ஹில்பெ(KNH) நிதியுதவியுடன் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட விற்பனைக் கண்காட்சி நேற்று (13) நடைபெற்றது.

"வலிமையான பெண்களுக்கு வலுவூட்டும் கரங்கள்" எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான குறித்த விற்பனை கண்காட்சியினை கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

சுய உதவிக் குழு பெண்களை வலுப்படுத்தும் நோக்கில், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி பொருட்களை சுமார் 40 விற்பனை கூடாரங்கள் அமைத்து காட்சிப்படுத்தியிருந்தனர்.

உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை மக்கள் மத்தியில் இலகுவாக கொண்டு சென்று உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் குறித்த விற்பனைக் கண்காட்சி நேற்று மாலை 5.00 மணிவரை இடம்பெற்றது.

## மன்னாரில் பெண்களுக்கான கருத்தரங்கு நிகழ்வில் ஜலனி பிரேமதாச



**(மன்னார் குறுப் நிருபர்)**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து அவரது மனைவி ஜலனி பிரேமதாச மன்னார் முசலி பிரிவில் பரப்புரையில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த பரப்புரை நிகழ்வானது நேற்று முன்தினம் (12) மாலை இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீனின் அழைப்பின் பேரில் மன்னார் முசலி பொற்கேணி பிரதேசத்திற்கு வருகை தந்து அவர் அங்கு மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் மன்னார் அளக்கட்டு பொற்கேணியில் இடம்பெற்ற பெண்களுக்கான கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன், மக்கள் சக்தியின் அமைப்பாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புகள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

## கனடாவில் இருந்து யாழில் காணி வாங்க வந்தவரின் 85 இலட்ச ரூபாய் பணத்துடன் தலைமறைவான தரகர்

**(யாழ். விசேட நிருபர்)**

கனடா நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் காணி வாங்குவதற்காக வந்தவரின் 85 இலட்ச ரூபாய் பணம், காணி தரகரால் அபகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக்கொண்டு கனடா நாட்டில் வசித்துவரும் நபரொருவர் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் காணி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

அவருக்கு குறித்த காணியை கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த காணி தரகர் ஒருவரே காணியை அடையாளம் காட்டி, காணி உரிமையாளருடன் பேச்சுக்களையும் நடத்தியுள்ளார். அதனையடுத்து காணியை கொள்வனவு செய்வதற்கு 85 இலட்ச ரூபாய் பணத்தினை ரொக்கமாக தயார் செய்திருந்தார். அந்த பணத்தினை கனடா வாசி தன்னுடன் வைத்திருந்தார். அவர் அசந்த நேரம் பார்த்து, காணி தரகர் 85 இலட்ச ரூபாய் பணத்தினை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளார். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளநிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அவசியமில்லை

(அக்குறணை குறூப் நிருபர்)



அமைச்சர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வீசா பெற்றுக் கொண்டமை தொடர்பில் தனக்கு தெரியாது எனவும் யாரும் தப்பிச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்திருந்த போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், எந்த அமைச்சரும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வீசா பெற்றுக் கொண்டமை தொடர்பில் தனக்கு தெரியாது எனவும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் யாரும் தப்பிச் செல்ல வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு நாட்டிலும் பத்து வருடங்கள் வாழ தான் வீசா வைத்திருப்பதாகவும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வீசா பெற வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் 80 அமைச்சர்கள் நாட்டை விட்டு வெளியேற வீசா பெற்றுள்ளதாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவ்வாறு கூறியிருந்தாலும் தேர்தல் பிரசாரங்களின் போது ஒவ்வொருவரும் கூறுவது போல் இதுவும் ஒரு அடிப்படையற்ற கூற்றாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# வெல்லவாய மலைப்பகுதியில் காட்டுத்தீ; பல ஏக்கர் எரிந்து நாசம்

(ஊவா சுழற்சி நிருபர்)



வெல்லவாய பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட செல்லபாவ மலை வனப்பகுதிக்கு இனந்தெரியாதோரால் நேற்றுமுன்தினம் (12) மாலை தீ வைக்கப்பட்டுள்ளது. பாரிய தீ விபத்து காரணமாக பல ஏக்கர் வனப்பகுதியில் தீ பரவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுத் தீ வேகமாக பரவியதால், ஏராளமான ஏக்கர் நிலங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

அதேவேளை காட்டு மிருகங்கள் மாத்திரமின்றி பெறுமதியான தேக்கை, கம்மாலு, நெல்லி, பசளி போன்ற மரங்களும் தீயினால் கருகியுள்ளது. இப்பகுதியில் நிலவும் வறண்ட காலநிலை மற்றும் காற்று காரணமாக, தீ வேகமாக பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, தீ பரவல் காரணமாக மலையடிவாரம் முதல் உச்சி வரை அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊவா மாகாண ஆளுநராக அநுர விதானகமகே பதவியேற்பு

(ஊவா சுழற்சி நிருபர்)





ஊவா மாகாண ஆளுநர் பதவிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட அநுர விதானகமகே கடந்த செவ்வாய்க்கிழமை காலை மாகாண சபை அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்று கொண்டார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து அண்மையில் பதவியை விட்டு விலகிய முன்னாள் ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலின் வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். அநுர விதானகமகே தற்போது ஊவா மாகாணத்திற்குப் பொறுப்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட அபிவிருத்தி ஆலோசகராக கடமையாற்றி வருவதுடன் ஊவா மாகாண சபையில் சிரேஷ்ட அமைச்சராகவும் கடமையாற்றியவர்.

இவ்வைபவத்தில் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஊவா மாகாண பிரதம செயலாளர் திருமதி தமயந்தி பரணகம மற்றும் ஊவா மாகாண சபை ஆளுநர் அலுவலகத்தில் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பேச்சுப்போட்டியில் முதலிடம்

(லுணுகல நிருபர்)



ஹாலிஎல எலவட்டன் தமிழ் வித்தியாலய மாணவி அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

ஊவா மாகாண மட்டப் போட்டி முதலாம் பிரிவு பேச்சுப் போட்டியில் டி.தஸ்மிகா என்ற ஹாலிஎல எலவட்டன் தமிழ் வித்தியாலய மாணவி முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இதேவேளை வலய மட்டப்போட்டிகளில் பாவோதல் போட்டியில் எஸ்.ஜஷ்வின்யா மூன்றாமிடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

94 வருடகால பாடசாலை வரலாற்றில் முதற்தடவையாக அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டியில் தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ள மாணவியையும் பொறுப்பாசிரியர் டி.கிரிஷாந்த் உள்ளிட்ட ஆசிரியர்களையும் பாடசாலை அதிபர் ஜனாப் ஏ.ஜே.எம்.அஷாட் மற்றும் பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் மீது தாக்குதல்



மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்த பஸ் மீது இனந்தெரியாத சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் மொனராகலை பிரதேசசபை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்த குழுவினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் நால்வர் காயமடைந்துள்ளதுடன், அவர்கள் சிகிச்சைக்காக புத்தல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# எதுன்கஹகொடுவ முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஊடகப் பிரிவு அங்குரார்ப்பணம்





குளியாப்பிட்டிய எதுன்கஹகொடுவ முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஊடகப் பிரிவு அங்குரார்ப்பண நிகழ்வு மற்றும் சின்னம் அணிவிக்கும் நிகழ்வு என்பன அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஆர்.எம் ரிப்கான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜே.எம் மீடியா நிறுவனத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான சட்டமாணி ராஷிட் மல்ஹர்டீன் கலந்து சிறப்பித்தார்.

பாடசாலைக் காலங்களில் கல்விப் பணியோடு சேர்த்து இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது வளமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் எனவும் தீய செயற்பாடுகளுக்கு மாணவர்கள் செல்வதில் இருந்து தடுக்கக் கூடிய நிலை காணப்படுவதாகவும் ராஷிட் மல்ஹர்டீன் தெரிவித்தார். மாணவர்களின் ஊடக அறிவை மேம்படுத்தி பாடசாலை ஊடகப்பிரிவை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டதோடு தலைமைத்துவ பண்புகள் மற்றும் ஊடகத்தின் முக்கியத்துவம் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 200ற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். ஊடகத்துறையில் சாதிக்கக் கூடிய மாணவர்களை உருவாக்கும் நோக்கில் எதுன்கஹகொடுவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் ஊடகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா மாவட்டத்தில் 605292 பேர் வாக்களிக்கத் தகுதி

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 532 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களார்கள் வாக்குகளை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 605292 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

532 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், 8500 அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் நாளில் மாலை 6 மணிக்குள் நுவரெலியா மாவட்டத்தில் முதலாவது வாக்குப் பெட்டிகள் கிடைக்கும் என நம்பப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். நுவரெலியா மாவட்டத்தின் தபால் மூல வாக்குகளின் பெறுபேறுகளை இரவு 10 மணிக்கு முன்னர் வழங்குவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம், இதற்கு நுவரெலியா காமினி தேசிய பாடசாலை பிரதான வாக்கு எண்ணும் மையமாக பயன்படுத்தப்படவுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் பெரிதாக பதிவாகவில்லை எனவும் சிறிதளவு மட்டுமே பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹைபொரஸ்ட்டில் இலங்கை வங்கி கிளை திறப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)



இலங்கை வங்கியின் இணைப்பு கிளையொன்று நுவரெலியா ஹைபொரஸ்ட் நகரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் மத்திய மாகாண உதவி முகாமையாளர் சரத் விஜயசிங்க, இலங்கை வங்கியின் நுவரெலியா பிரதேச பிராந்திய முகாமையாளர் பி.விஸ்வநாதன், இலங்கை வங்கி கந்தப்பளை கிளை முகாமையாளர் புத்திக்க இதுல நாகரவசின் பிரதனாத்வியன் ஆகியோரால் இக்கிளை திறந்து வைக்கப்பட்டது.

ஹைபொரஸ்ட் பிரதேச மக்களின் நலன்கருதியே இங்கு இலங்கை வங்கியின் இணைப்பு கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் வங்கியொன்று இல்லாமையால் மக்கள் பல்வேறு செளகரியங்களை சந்தித்து வந்துள்ளனர். பணத்தை வைப்பிலிடுவதற்கு சுமார் 14 கிலோமீற்றர் பயணம் செய்து இராகலை நகருக்கே செல்ல வேண்டியிருந்தது இந்நிலையில் இலங்கை வங்கி ஊடாக இணைப்பு கிளையொன்று இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளமைக்கு பிரதேச மக்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.



கண்டி திகனைப் பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள எலைட் வைத்திய நிலையத்தில் இம்மாதம் முழுவதும் ஒரு நாளைக்கு 20 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சலுகை அடிப்படையில் பல்வேறு வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(படம்: அக்குறணை குறூப் நிருபர்)

# மலையக மக்களால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவார்

## இ.தொ.காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ்

(பொகவந்தலாவ நிருபர்)

மலையக மக்கள் தமது வாக்குகளை வழங்கி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற செய்வார்கள் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்தார். மஸ்கெலியா நகரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்புடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முயற்சியால் இன்று தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் பெருந்தோட்ட பிரதேச மக்களுக்கும் வாழ்வாதார கொடுப்பனவான அஸ்வெஸ்ம வழங்கப்பட்டுள்ளது. தோட்ட குடியிருப்பு பிரதேசத்தை கிராமமாக்கும் முன்மொழிவு பல்வேறு சாதகமான அம்சங்கள் சேர்க்கப்பட்டு பெருந்தோட்ட பிரதேச குடியிருப்பாளர்களின் உடையாக்கப்படவுள்ளது.

கல்வித் துறையிலும் சுகாதார துறையிலும் எதிர்வரும் 5 ஆண்டுகளில் முன்னேற்றகரமான மாற்றங்களை காண முடியும் என எதிர்பார்க்கிறோம். பெருந்தோட்ட பிரதேச பாடசாலைகளுக்கு 2500 உதவி ஆசிரியர்களை நியமிக்கும் நடவடிக்கைக்கு எதிராக சிலர் நீதிமன்றம் சென்றுள்ளதால் அது தற்காலிகமாக தடைப்பட்டுள்ளது. இதற்கான தடையை நீக்கி ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

நாடு மிகப்பெரும் பொருளாதார சூழ்நிலையில் சிக்கித் தவித்த போதும் மலையக மக்களின் தேவைகளை அறிந்து அதற்கு சரியான நிவாரணங்களை வழங்கியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் நல்லூர் திருவிழாவில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப்




யாழ்ப்பாணத்தில் நல்லூர் திருவிழாவின் போது ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் விசேட விழிப்புணர்வு நிகழ்வை மேற்கொண்டது. இக்காலத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் யாழ்பாணத்திற்குப் பல யாத்திரிகர்கள் செல்வதுடன், நல்லூர் உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக வெளிநாட்டில் இருந்தும் பல இலங்கையர்கள் நாடு திரும்புகின்றனர். பங்கேற்பாளர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று மதிப்புமிக்க பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெற்றனர். மேலும், ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைஃப் விற்பனைக் குழு, யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காப்புறுதியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடு வீடாகச் சென்று பிரசாரத்தை மேற்கொண்டது.

# Orient Finance, 2023/24 இல் மகத்தான நிதியியல் திருப்புமுனைகளை எட்டியுள்ளது

Orient Finance நிறுவனம், 2023/24 ஆண்டில் தனது நிதியியல் பெறுபேறுகள் மூலமாக பாரிய திருப்புமுனையை எட்டியுள்ளதுடன், கடந்த ஆண்டில் ஏற்பட்ட ரூபா 72 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில், 584% என்ற மகத்தான வளர்ச்சியுடன், ரூபா 348.53 மில்லியன் தொகையை வரிக்குப் பின்னரான இலாபமாக பதிவாக்கியுள்ளது. மொத்த சொத்துக்கள் 17% ஆல் அதிகரித்து, ரூபா 20,477 மில்லியனாக காணப்பட்டதுடன், வழங்கல் துறைசார் விரிவாக்கம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றில் நிறுவனத்தின் வலுவான அணுகுமுறையின் உந்துசக்தியுடன், 8% என்ற தொழிற்துறையின் சராசரிக்கும் மேலாக, விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலித்துள்ளது.

**நிதியியல் பெறுபேறுகள் குறித்த முக்கிய சாராம்சங்கள்:**

2023/24 இற்கான இலாபம்: 2022/23 இன் ரூபா 72 மில்லியனிலிருந்து அதிகரித்து ரூபா 348.53 மில்லியன்

மொத்த சொத்துக்கள்: 2022/23 இன் ரூபா 17,469 மில்லியனிலிருந்து அதிகரித்து ரூபா 20,477 மில்லியன்

கடன்கள் மற்றும் வருமதிகள்: 2022/23 இன் ரூபா 12,941 மில்லியனிலிருந்து அதிகரித்து ரூபா 15,659 மில்லியன்

வைப்புக்கள்: 2022/23 இன் ரூபா 10,759 மில்லியனிலிருந்து அதிகரித்து ரூபா 13,556 மில்லியன்

மொத்த பங்கு: 2022/23 இன் ரூபா 3,281 மில்லியனிலிருந்து அதிகரித்து ரூபா 3,603 மில்லியன்

பங்கொன்றுக்கான அடிப்படை வருவாய்: 2022/23 இன் ரூபா 0.34 இலிருந்து அதிகரித்து ரூபா 1.65

பங்கொன்றுக்கான நிகர சொத்துக்கள்: 2022/23 இன் ரூபா 15.54 இலிருந்து அதிகரித்து ரூபா 17.07

பங்கொன்றின் மீதான வருவாய் (ROE): 2022/23 இன் 2.18% இலிருந்து அதிகரித்து 10.13%

Orient Finance நிறுவனத்தின் நிகர வட்டி வருமானம் மிகவும் போற்றத்தக்க வகையில் 81% ஆல் அதிகரித்து ரூபா 1.79 பில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளதுடன், கூடுதலான கடன் வழங்கல்கள் மற்றும் மேம்பட்ட வட்டி இலாப வரம்புகளின் உந்துசக்தியுடன், கடன் நடவடிக்கைகளின் திறன்மிக்க முகாமைத்துவம் மற்றும் பிரதான வணிக தொழிற்பாடுகளில் மேம்பட்ட இலாபத்திறன் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றது.




# வணிக விசா பிரச்சினை குறித்து அவசர நடவடிக்கை எடுக்குமாறு JAAF கோரிக்கை



ஆகஸ்ட் 2 முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள குறுகிய கால வணிக வீசாக்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான பிரச்சினைகளை அவசரமாறு தீர்க்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஒன்றிணைந்த ஆடை சங்கங்களின் மன்றம் (JAAF), கோரிக்கை விடுத்துள்ளது.

*On Arrival* இல் சுற்றுலா விசாக்கள் கிடைக்கின்ற போதிலும், இந்த வழிமுறையின் மூலம் வணிக விசா வழங்கும் வசதி தற்போது இல்லை. குறுகிய கால வணிக வருகைகளுக்காக வரும் வெளிநாட்டவர்கள் சுற்றுலா விசாக்களுக்கு தகுதியற்றவர்கள், இது வெளிநாட்டு வணிக வருகையாளர்களுக்கு இடமளிக்கும் நாட்டின் திறனில் ஒரு முக்கியமான இடைவெளியை விட்டுச்செல்கிறது. ஏற்றுமதி மற்றும் வணிக விரிவாக்கத்திற்கு சர்வதேச ஈடுபாடு இன்றியமையாததாக இருக்கும் குறிப்பாக ஆடை மற்றும் உற்பத்தி போன்ற துறைகளில், நாட்டின் பொருளாதார மீட்சிக்கு இந்த வருகையாளர்கள் அவசியம் என்று JAAF சுட்டிக்காட்டுகிறது.

வருகை தர விரும்பும் வணிக வருகையாளர்களுக்கு இலங்கைக்குள் நுழைவதற்கான உதவியான வழிகாட்டலை வழங்காமல், குடிவரவு இணையத்தளம் காலாவதியாகியுள்ளது, இது குழப்பத்தை அதிகரிக்கிறது. இந்த தெளிவின்மை மேலும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கி, சர்வதேச வணிகத்தின் செயற்பாடுகளை பாதிக்கிறது. மேலும், 35 நாடுகளுக்கு வீசா இல்லாத நுழைவு (*VisaFree Entry*) குறித்து விவாதங்கள் நடைபெற்றாலும், இந்த கொள்கையின் செயல்படுத்தல் தாமதமாகியுள்ளது, இதனால் நிலைமை மேலும் சிக்கலாகிறது.

"இலங்கையின் தொழில் முயற்சிகள் அவற்றின் தொடர்ச்சியான மீட்பு முயற்சிகளில் ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளன. அத்தகைய தருணத்தில், சரக்குகள் மட்டுமின்றி, பணியாளர்களின் செயற்பாடுகளையும் சீராக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

# eMACH.ai ஐ அறிமுகப்படுத்தும் Intellect




நிறுவன மட்டத்திலான நிதித் தொழில்நுட்ப தீர்வுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான *Intellect Design Arena Ltd* நிறுவனம், இலங்கையில் *eMACH.ai* ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. பிரத்தியேகமாக இலங்கையின் நிதித்துறைக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய தளமானது, கோட்பாடுகளின் சிந்தனை அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது, *329* நுண் சேவைகள், *535* நிகழ்வுகள், *1757* இற்கும் மேற்பட்ட *API* களை வழங்கும் முதலாவது கோட்பாடுகளின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட தளம் என்பதோடு, நிதி நிறுவனங்களுக்கு எதிர்காலத்திற்கு அவசியமான தீர்வுகளை உருவாக்கி, அவர்கள் உலகளாவிய போட்டித்தன்மை வாய்ந்தவர்களாக மாற உதவுகிறது.

*eMACH.ai* ஆனது, வங்கி வாடிக்கையாளர்களை மையப்படுத்திய *Retail, HNI, SME* அல்லது *Corporate* மற்றும் அவர்களது நிதிப் பயணத்தில் காணப்படும் நிகழ்வுகள், வங்கிச் செயற்பாடுள் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் இணக்கப்பட்டு அதிகாரசபைகளால் உருவாக்கப்பட்ட விடயங்களை பராமரிக்கின்றது. *eMACH.ai* ஆனது வங்கிகளுக்கான தொழில்நுட்பத்தை எளிதாக்கி, அவை மேம்படுத்தப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும் தீர்வுகளை உருவாக்க உதவுகின்றன. ஒரு விடயத்தை உருவாக்கக்கூடிய இதிலுள்ள கட்டமைப்பானது, விரைவான தொழில்நுட்ப மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும் போது, வாடிக்கையாளர்களின் மாறுபட்ட தேவைகளை வங்கிகளால் பூர்த்தி செய்ய உதவுகிறது. தனியே தொழில்நுட்பத்தை மாத்திரம் மேம்படுத்துவதை விட, வாடிக்கையாளர்களின் மீது கவனம் செலுத்தவும், முக்கிய வணிக தாக்கங்களை ஏற்படுத்தவும் இந்த தளம் வங்கிகளுக்கு உதவுகிறது.

*Intellect* ஆனது *HDFC, Regional Development Bank (RDB), Cargills Bank, Commercial Development Bank (CDB), Central Finance, Seylan Bank, Union Bank of Colombo* உள்ளிட்ட இலங்கையின் உயர்மட்ட நிதி நிறுவனங்களுடன் ஏற்கனவே இணைந்து செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இத்தளமானது,

- *329* நுண் சேவைகள், *1757 API*கள், *535* நிகழ்வுள் மூலம் வங்கிகள் எதிர்காலத்திற்கு ஏற்ற தீர்வுகளை வடிவமைக்க உதவுகிறது.
- நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட நுண்ணறிவுக்கான ஊக்கியாக செயற்பட்டு, *Intellect* இன் தலைமைத்துவ வழிகாட்டல் மூலம் வங்கிகள் முன்னேற்றமடைய உதவுகிறது.
- நிதி தொடர்பான புத்தாக்க கண்டுபிடிப்புகளை வரவேற்று, இலங்கையின் நிதி எதிர்காலத்தை மீள்வடிவமைத்து உலகளாவிய ரீதியில் போட்டியிட உதவுகிறது.
- *iTurmeric, MACH* ஆகியவற்றின் மூலமான உருவாக்கக்கூடிய தளம் மற்றும் *Purple Fabric* மூலம் முடிவெடுக்கும்தர நுண்ணறிவு தளம் ஆகியவற்றின் மூலம் செயற்பாடுகளை மாற்றியமைப்பதன் மூலமும் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துவதன் மூலமும் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்க உதவுகிறது.

# TEA 25ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்: தேயிலை தொழில்துறையின் அர்ப்பணிப்பு




தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் (*Tea Exporters Association TEA*) தனது 25ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தை (*Annual General Meeting AGM*) 2024 அண்மையில் நடாத்தியுள்ளது. தேயிலைத் தொழில்துறையின் நாட்காட்டியில் மிகவும் முக்கியமானதொரு நிகழ்வாகக் கருதப்படுகின்ற இந்நிகழ்வில், தொழிற்துறையுடன் தொடர்புபட்ட *500* இற்கும் மேற்பட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் மதிப்பிற்குரிய விருந்தினர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர். TEA இன் 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதுடன் இணைந்ததாக, இச்சங்கம் இலங்கையின் தேயிலை தொழில்துறை மீது கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் பரிணாம மாற்றம் கண்டு வருகின்ற சர்வதேச சவால்களுக்கு மத்தியில் எந்த சூழ்நிலைக்கும் முகங்கொடுத்து, அதிலிருந்து வெளிவருவதில் அதன் தொடர்ச்சியான ஆற்றல் குறித்து காண்பிப்பதற்கான வாய்ப்பாக இந்த *AGM* அமையப் பெற்றது.

மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் முகாமையாளரான திரு. கெவோர்க் சர்க்சியன் அவர்கள் பிரதம அதிதியாக *AGM* நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளார். *"Steeping Sustainably Growing Tea Exports Responsibly"* (நிலைக்குத்தான நிலைபேற்றியல் தேயிலை ஏற்றுமதியை பொறுப்புணர்வுடன் வளர்ச்சி பெறச் செய்தல்) என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டு நிகழ்வு இடம்பெற்றதுடன், தொழில்துறையினுள் நிலைபேணத்தக்க நடைமுறைகளை ஊக்குவிப்பதில் சங்கம் தற்போது முன்னெடுத்து வருகின்ற முயற்சிகளை எதிரொலிக்கும் வகையில் இது அமையப்பெற்றது.

*1999* ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கமானது நாட்டின் வருடாந்த தேயிலை ஏற்றுமதியின் அளவிலும், பெறுமானத்திலும் சுமார் *80%* இனை பிரதிநிதித்துவம் செய்தவாறு, இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்களின் முன்னணி குரலாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

# 43 வருட நிதிச் சாதனையை கொண்டாடும் Orient Finance



*Orient Finance PLC* ஆனது, நிதித் துறையில் நான்கு தசாப்த காலமாக வெளிப்படுத்தும் நிலைத்தன்மை மற்றும் சிறந்த செயல்பாடு ஆகியவற்றை நினைவுகூர்ந்து அதன் *43*ஆம் ஆண்டு விழாவை *2024* ஜூலை *26*ம் திகதி கோலாகலமாகக் கொண்டாடியது. *1981*ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட *Orient Finance PLC* அதன் நிலையான முன்னேற்றம் மற்றும் விவேகமான செயல்பாட்டின் மூலம் இலங்கையில் முன்னணி நிதி நிறுவனமாக விளங்குகின்றது.

கடந்த நிதியாண்டில் நிறுவனம் தோராயமாக *350* மில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளதுடன் *20* பில்லியனுக்கு மேலான சொத்து மதிப்பை தன் வசம் கொண்டுள்ளது. தீர்க்கமான செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதன் மூலமும், மீட்பு உத்திகள் மூலமும் *Orient Finance* அதன் நிதி நிலையை உறுதிப்படுத்தி நிலையான எதிர்கால வளர்ச்சிக்கு வழியமைத்துள்ளது.

*43*ஆம் ஆண்டு நிறைவின் ஓர் சிறப்பம்சமாக *Orient Finance PLC* களுத்துறை மாவட்டத்தில் காடு வளர்ப்பு திட்டங்களுக்கு *7500* மரக்கன்றுகளை வழங்கியுள்ளது. பிரபல யஜிராலா, ருனாகந்தே மற்றும் ஹேகொக் மழைக் காடுகளுக்கு புத்துயிர் அளிக்கும் வகையிலான இந்த முன்மாதிரி திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் மற்றும் சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்பு இந்த செயற்பாட்டுக்கு கிடைக்கின்றமை விசேட அம்சமாகும்.

மேல் மாகாணத்தில் *1,598* கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ள களுத்துறை களுகங்கை, பாணந்துறை கங்கை, பெந்தோட்டை கங்கை மற்றும் *40* கிலோமீட்டர் கடற்கரை ஆகிய முக்கிய நீர் நிலைகளால் வேறுபடுகின்றது. இயற்கை வளம் இருந்தாலும் மாவட்டத்தின் வனப் பகுதி 9மூ சதவீத்துக்கும் குறைவாகவே காணப்படுகின்றது. மேற்படி செயலாக்க திட்டமானது மண்ணரிப்பு, நிலச்சரிவு அபாயங்கள் மற்றும் காடழிப்பு ஆகியவற்றிலிருந்து விடுபடும் மற்றும் மரங்களின் அடர்த்தியை அதிகரிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

# 450 ஸ்கூட்டர்களை அறிமுகப்படுத்த Ather Energy உடன் கூட்டு சேர்ந்துள்ள Evolution Auto




*Evolution Auto*, சென்சேய் கேபிடல் பார்ட்னர்ஸ், அட்மான் குரூப் மற்றும் சினோ லங்கா பிரைவேட் லிமிடெட் ஆகியவை ஒன்றிணைந்து, மேம்பட்ட மின்சார ஸ்கூட்டர் வரிசையான *Ather 450* மாதிரிகளை அறிமுகப்படுத்துவதை பெருமையுடன் அறிவிக்கிறது. *Ather* இன் உத்தியோகபூர்வ விநியோகஸ்தரான *Evolution Auto*, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் அதே வேளையில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஆதரிக்கும் சூழல் நட்புறவான மற்றும் செலவு குறைந்த போக்குவரத்து தீர்வுகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் பயணத்தில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியாவின் முன்னணி மின்சார ஸ்கூட்டர் உற்பத்தியாளரான *Ather Energy* உடன் இணைந்து, *Evolution Auto* மேம்பட்ட மற்றும் ஆற்றல் மிக்க *Ather 450* தொடரை இலங்கை சந்தைக்குக் கொண்டு வருகிறது. அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் இணையற்ற செயல்திறன் அம்சங்களுடன் பொருத்தப்பட்டிருக்கும் *Ather 450* சீரிஸ், சக்திவாய்ந்த மின்சார மோட்டார், விரைவான முடுக்கம் மற்றும் மணிக்கு *90* கிமீ வேகத்தில் செல்லக்கூடியதோர் பயண அனுபவத்தையும் வழங்குகிறது. ஸ்கூட்டரின் புத்திசாலித்தனமான டேஷ்போர்டு, நிகழ்நேர கண்டறிதல் மற்றும் வழிசெலுத்தல், இருக்கைக்கு கீழே உள்ள விரிவான சேமிப்பகம், மீளுருவாக்கம் செய்யும் பிரேக்கிங் மற்றும் *60* நிமிடங்களில் *80%* வரையில் வேகமான சார்ஜிங் திறன்களையும் வழங்குகிறது.

*Evolution Auto* இன் பொது முகாமையாளர் ஷஹ்ரான் சைவூடின், 'சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார மாற்றத்தினை அனைவருக்கும் அணுகக்கூடிய வகையில் இலங்கையில் நிலையான போக்குவரத்தை நோக்கிய மாற்றத்தை வழிநடத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். *Ather Energy* உடன் இணைந்து இந்த உலக தரம் வாய்ந்த அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' என்றார்.

# கொழும்பு பல்கலைக்கழகத்துடன் கூட்டு சேர்ந்த ஜோன் கீல்ஸ் குழுமத்தின் ஒக்டேவ்



ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு மையமான ஒக்டேவ் (*OCTAVE*), புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம், இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் புள்ளிவிபரவியல் துறையுடன் தனது ஒருங்கிணைப்பை அதிகாரப்பூர்வமாக முடிவு செய்துள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திரா மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் எச். டி. கருணாரத்ன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த வெற்றிகரமான ஒருங்கிணைவுடன் மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக் கழகத்துடனான ஒருங்கிணைவு, ஒக்டேவ் மற்றும் முன்னணி கல்வி நிறுவனங்களுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துகிறது. இந்த ஒருங்கிணைவு மூலம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் தரவு பகுப்பாய்வு பாடத்தொகுப்பை மேம்படுத்த ஒக்டேவ் உதவும். தரவு அறிவியல் (*Data Science*), இயந்திர கற்றல் (*Machine Learning*) மற்றும் தரவு பொறியியல் (*Data Engineering*) போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்தப்படும். தொழில்துறையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் சமீப முன்னேற்றங்களை ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு அதிநவீன அறிவை வழங்குவதை ஒக்டேவ் நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன், ஒக்டேவின் அனுபவமிக்க வல்லுநர்கள் இறுதியாண்டு செயற்றிட்டங்களுக்கு மேற்பார்வையாளர்களாகவும், கௌரவ விரிவுரையாளர்களாகவும் பணியாற்றுவதுடன் அவர்களின் நிபுணத்துவ அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

மேலும், பல்கலைக்கழகத்தின் திறமையான மற்றும் ஊக்கமுள்ள மாணவர்களுக்கு இன்டர்ன்ஷிப் (*Internship*) வாய்ப்புகளை வழங்க ஒக்டேவ் தீர்மானித்துள்ளது.

# புத்தாக்கமான ஆய்வுகூட நுழைவு முகத்துடன் ஹேமாஸ் மருத்துவமனை




நோயாளர்களுக்கான சிகிச்சையில் மற்றுமொரு முன்னோடி முயற்சியை மேற்கொண்டுள்ள ஹேமாஸ் மருத்துவமனை, நோயாளர்கள் தம்முடைய ஆய்வுகூட அறிக்கைகள் மற்றும் பெறுபேறுகளை பெற்று, நிர்வகிக்கின்ற வழிமுறையில் மாற்றத்தைக் கொண்டுவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு புரட்சிகரமான இணையத் தளமேடையான, தனது நிகழ்நிலை ஆய்வுகூட நுழைமுகத்தை (*Lab Portal*) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஆய்வுகூட நுழைமுகமானது, நோயாளர்கள் தமது கடந்தகால ஆய்வுகூட சோதனை பெறுபேறுகள் மற்றும் சமீபத்தைய சோதனைப் பெறுபேறுகளை தமது ஸ்மார்ட்போன்களின் மூலமாக சௌகரியமாக பார்ப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதுடன், சுகாதாரப் பராமரிப்பு நிர்வாகத்தில் தங்குதடையின்றிய மற்றும் திறன்மிக்க அணுகுமுறைக்கும் வித்திட்டுள்ளது. இலங்கையில் முதல்முறையாக இத்தகைய முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், டிஜிட்டலுக்கு இடமளித்தல் மற்றும் நோயாளரை மையப்படுத்திய கவனிப்பு ஆகியவற்றில் ஹேமாஸ் மருத்துவமனை கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

*Hemas Labs* இன் பணிப்பாளர் வைத்தியர் துஷியந்தன் சுப்பிரமணியம் அவர்கள் இப்புதிய சிறப்பம்சம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "எம்மிடம் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வருகின்ற நோயாளர்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் இந்த புத்தாக்கத்துடனான நுழைமுகமானது கணிசமானதொரு முன்னேற்றப்படியாக மாறியுள்ளதுடன், அவர்கள் தம்முடைய ஆய்வுகூட அறிக்கைகளை சௌகரியமாகப் பெற்றுக்கொள்வதற்கு இடமளித்து, அவர்களுடைய ஒட்டுமொத்த அனுபவத்தையும் மகத்தான அளவில் மேம்படுத்துகின்றது. தொடர்ச்சியாக நாம் முன்னெடுத்து வருகின்ற புத்தாக்கத்தின் மீதான அர்ப்பணிப்பை இப்புதிய வசதி சிறப்பாக பிரதிபலிக்கின்றது.

# மாலைதீவில் அதிகரிக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கடும் எச்சரிக்கை



மாலைதீவின் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக அந்நாட்டு வர்த்தக சம்மேளனம் எச்சரித்துள்ளது.

மாலைதீவு பொருளாதாரம் வங்குரோத்து நிலையை நெருங்கி இருப்பதாகவும், ஆனால் அரசாங்க அதிகாரிகள் எச்சரிக்கைகளை பொருட்படுத்துவதில்லை என்றும் மாலைதீவு வர்த்தக சம்மேளனம் நேற்று முன்தினம் (12) வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிப்படைத்தன்மை மற்றும் அவசர சீர்திருத்தங்களுக்கு அது அழைப்பு விடுத்துள்ளது.

'மாலைதீவின் கடன் சுமை பொருளாதார சிவப்புக் கோட்டைத் தாண்டியுள்ளது. ஒவ்வொரு நாளும் நாம் வெளி நிதி ஆதாரத்தை நம்பி இருப்பதோடு ஒவ்வொரு மாதமும் எமது சம்பள கடப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியுமா என்ற கேள்வியை எதிர்கொண்டிருக்கிறோம்' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வங்குரோத்தாகி, குடிமக்களின் வேதனைகளுடன் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்தபோதும், அரசாங்கம் தொடர்ந்து தவறான நேர்மறையான வழிநடத்தலை செய்து வருவதாக மாலைதீவு வர்த்தக சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது. 'பொருளாதாரத்தின் தற்போதைய நிலை பொதுமக்களிடமிருந்து மறைக்கப்பட்டுள்ளது. மேலும் மூத்த அதிகாரிகள் எதிர்காலத்திற்கான யதார்த்தமற்ற கண்ணோட்டத்தை சித்தரிக்கின்றனர்' என்று அந்த சம்மேளனம் கூறியது.

நெருக்கடியின் அளவை ஒப்புக்கொள்ள கொள்கை வகுப்பாளர்கள் தவறிவிட்டதாகவும் அது குற்றம் சாட்டியது.

## சர்வதேச செய்திகள்

# பங்களாதேஷில் அமைதியின்மையால் 219 தொழிற்சாலைகளுக்குப் பூட்டு

## இன்றைக்குள் திறக்காவிட்டால் பெரும் நெருக்கடி



பாங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் புறநகரான அஷுலியாவில் உள்ள 219 ஆடைத் தொழிற்சாலைகள் ஊழியர்களின் அமைதியின்மை காரணமாக மூடப்பட்டிருப்பதோடு, அங்கு இன்றைக்குள்ள (14) உற்பத்திகளை ஆரம்பிக்காத பட்சத்தில் பங்களாதேஷ் ஆடைத் தொழில்துறை பெரும் நெருக்கடியில் சிக்கிக்கொள்ளும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பதற்றத்திற்குப் பின்னால் சதிவேலைகள் இருப்பதாக அதிகாரிகள் சந்தேகிப்பதோடு சில தொழிற்சாலைகள் சேதப்படுத்துப்பட்டதற்குப் பின்னால் உண்மையான தொழிலாளர்கள் இல்லை என்று நம்புகின்றனர். அரசியல் பிளவுகள் மற்றும் வர்த்தக நிலைமை குறித்த இட்டுக்கட்டப்பட்ட கதைகள் இந்த பதற்றத்தின் பின்னணியில் இருப்பதாக தொழிற்சங்கத் தலைவர்கள் கூறுகின்றனர்.

மறுபுறம் தொழில்துறை பொலிஸாரின் செயலற்ற தன்மை மற்றும் தொழிலாளர்களின் அசாதாரண கோரிக்கைகளால் உரிமையாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். மேற்கு நாடுகளில் அடுத்த விடுமுறை பருவம் வரவிருக்கும் நிலையில் சர்வதேச கொள்வனவாளர்களிடம் இருந்து உரிமையாளர்கள் அழுத்தத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.



வேலை நிறுத்தம் ஒன்றில் எந்த ஒரு பிரிவையும் மூடுவதற்கு தொழில் சட்டத்தில் ஊழியர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் நிலையில் கடந்த புதனன்று 86 தொழிற்சாலைகள் காலவரையின்றி மூடப்பட்டன. மீதமுள்ள 133 தொழிற்சாலைகளும் பொது விடுமுறை அறிவிப்பை அடுத்து மூடப்பட்டதாக அஷுலியா தொழில்துறை பொலிஸ் அத்தியட்சகர் சர்வர் அலாம் தெரிவித்துள்ளார்.

மூடப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளில் 107 தொழிற்சாலைகள் பங்களாதேஷ் ஆடை உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாகும்.

குறிப்பாக பங்களாதேஷின் அவாமி லீக் அரசு கவிழ்க்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையிலும் பாதுகாப்பு கவலை காரணமாக தொழில்துறை பொலிஸார் இன்னும் முழுமையாக இயங்கவில்லை என்று கூறப்படுகிறது. அரசுக்கு எதிரான போராட்டங்களின்போது இணையதள துண்டிப்பு மற்றும் வீதிகளில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களினால் ஏற்கனவே பங்களாதேஷின் உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தொழில்துறை பொலிஸாரின் உதவி கிடைக்கவில்லை என்று உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். தொழில் வலயத்தில் ரோந்து செல்லும் பொலிஸாரின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தொழில் வலயத்தில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டபோதும் ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதற்கு அவர்களுக்கு சட்ட அதிகாரமும் இல்லை என்று ஷாஷா டெனிம் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஷம்ஸ் மஹ்மூத் குறிப்பிட்டுள்ளார்.

'பாதுகாப்பு கவலைகள் காரணமாக தொழில்சாலைகளை நடத்துவதற்கான நம்பிக்கையை நாம் இழந்துள்ளோம்' என்று மஹ்மூத் பங்களாதேஷின் டெய்லி ஸ்டார் பத்திரிகைக்கு குறிப்பிட்டுள்ளார்.

நேரத்திற்கு உற்பத்திகளை விநியோகிப்பதற்கு வெளிநாட்டு கொள்வனவாளர்கள் அழுத்தம் கொடுத்தபோதும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பது ஏமாற்றம் அளிப்பதாக மஹ்மூத் கூறினார். பல ஏற்றுமதிகளும் ரத்துச் செய்யப்படக்கூடும் அல்லது கொள்வனவாளர்கள் பெரும் கழிவுகளை கேட்கக்கூடும் அல்லது அதிக செலவு மிக்க வகையில் விமானம் மூலம் ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வர்த்தகம் உச்சத்தில் உள்ள நேரத்தில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பதற்ற நிலை காரணமாக பல சர்வதேச நிறுவனங்களும் கொள்வனவுகளை ரத்துச் செய்துள்ளதாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மின் தடைக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகை



தொடர்ந்து இடம்பெறும் மின்வெட்டை சரிசெய்யக் கோரி பங்களாதேஷின் காசிபூர் நகரின் கெபாசியா பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகத்தை நூறுக்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

ஒரு நாளில் பட தடவைகள் மின்சாரம் துண்டிக்கப்படுவதால் வர்த்தக செயற்பாடுகள் சீர்குலைந்திருப்பதாகவும் மக்கள் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் கூறிய மக்கள் நேற்று முன்தினம் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். அவர்கள் பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளரை அலுவலகத்தில் சிறை வைத்ததாக 'டெய்லி ஸ்டார்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாளொன்றுக்குக் குறைந்தது 10 முறையேனும் மின்சாரம் துண்டிக்கப்படுவதை உடன் சரி செய்யக் கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் மின் பொறியியல் அலுவலகத்தில் தொடர்ந்து தங்கி இருந்த நிலையில் அவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் அங்கு விரைந்துள்ளனர்.

கெபாசியா பகுதிக்கு நாள் ஒன்றுக்கு 22 மெகாவோட் மின்சாரத் தேவை இருந்தபோதும் மின் தட்டுப்பாடு காரணமாக அது 7 மெகாவோட்டுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

# இலங்கை ஜப்பானிய மொழி ஆசிரியர் சங்கம் வெளிவிவகார அமைச்சினால் பாராட்டி கௌரவிப்பு

இலங்கையில் ஜப்பானிய மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்கும், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கு இலங்கை ஜப்பானிய மொழி ஆசிரியர் சங்கம் (JALTAS)வெளியுறவு அமைச்சினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் ஜப்பான் தூதரகத்தின் 'The Ballroom' இல் பாராட்டுவிழா நடைபெற்றது. JALTAS இன் தலைவர் திருமதி தர்ஷனி ஜெயசேகர சங்கத்தின் சார்பாக கௌரவத்தை ஏற்றுக்கொண்டார்.



2004 இல் ஸ்தாபிக்கப்பட்ட JALTAS ஆனது 200 உறுப்பினர்களுக்கு மேல் வளர்ச்சியடைந்துள்ளதுடன் இலங்கையில் ஜப்பானிய மொழி மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றியுள்ளது. ஜப்பானிய A/L, O/L கருத்தரங்கு, ஜப்பானிய மொழி ஆசிரியர் பயிற்சி கருத்தரங்கு, ஜப்பானிய நாடகப் போட்டி மற்றும் ஜப்பானிய முகாம் போன்ற பல்வேறு முயற்சிகள் மூலம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஜப்பானிய மொழித் திறனை மேம்படுத்த JALTAS தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

ஜப்பானிய கலாசார கண்காட்சிகள், ஜப்பான் தூதரகத்துடன் இணைந்து, ஜல்டாஸின் மற்றொரு முக்கிய பங்களிப்பாகும். கண்காட்சிகள் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை ஈர்த்தது மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான கலாசார உறவுகளை ஆழப்படுத்தியது. பரிசளிப்பு



விழாவின் போது தூதர் MIZUKOSHI தனது கருத்துகளில், JALTAS இன் அனைத்து உறுப்பினர்களுக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை ஒப்புக்கொண்டார். ஜப்பான் அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாகவும் அவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்ததுடன், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் பிணைப்பை வலுப்படுத்துவதில் JALTAS ஆற்றிய முக்கிய பங்கை வலியுறுத்தினார். இந்த விருது கலாசார மற்றும் கல்வி உறவுகளை வளர்ப்பதில் ஜப்பான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் தற்போதைய அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது, மேலும் ஜப்பான் தூதரகம் எதிர்காலத்தில் JALTAS உடன் தொடர்ந்து ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது.

ஜப்பான் மற்றும் வெளிநாடுகளுக்கு இடையே நட்புறவை மேம்படுத்துவதில் அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், சர்வதேச துறையில் சிறந்த சாதனைகள் புரிந்த தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு வெளியுறவு அமைச்சரின் பாராட்டுக்கள் வழங்கப்படுகின்றன.

# புறக்கோட்டை 1ஆம் குறுக்குத் தெரு அணிகளுக்கிடையிலான கிரிக்கட் தொடர்

புறக்கோட்டை சமூக பொலிஸ் பிரிவும், புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெரு சுயதொழிலாளர்கள் சங்கமும் இணைந்து மூன்றாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட எல். டபிள்யூ. பெரேரா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கட் போட்டிகள் இம்மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை சந்திரா சில்வா மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் பகல் இரவு ஆட்டங்களாக நடைபெற்றன.

அணிக்கு எட்டுப் பேர் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டியானது 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.

இம்முறை மொத்தமாக 12 அணிகள் நான்கு குழுக்களின் கீழ் போட்டியிடுவதுடன் ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு தகுதி பெறும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் நொக் அவுட் முறையில் அனைத்து ஆட்டங்களும் நடைபெறும்.

சம்பியன் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு எல்.டபிள்யூ. பெரேரா ஞாபகார்த்த கிண்ணமும் இரண்டாமிடத்தைப் பெறும் அணிக்கு கிண்ணமும் வழங்கப்படவுள்ளதுடன் ஏனைய சிறப்பு பரிசுகள் பலவும் போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

# காட்டு யானையுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; ஒருவர் படுகாயம்

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

மிஹிந்தலை திருகோணமலை வீதியில் மஹாகனந்தராவ வாவிக்கு அருகில் காட்டு யானை மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதியமையால் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.அநுராதபுரம் உடமலுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் எஸ். கருணாரத்ன என்ற 54 வயதுடைய சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். பொலிஸ் சார்ஜன்ட் தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் கடமைக்கு சென்றுக் கொண்டிருக்கும் போது மஹாகனந்தராவ வாவிக்கு அருகில் வீதியை கடக்க முற்பட்ட காட்டு யானையுடன் மோதி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இதனையடுத்து காயமடைந்த சார்ஜன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.





ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கும் வகையில் அநுராதபுரம் மாவட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் பேரணி அண்மையில் கனேவல்பொலவில் நடைபெற்றது.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# எமது சமூகத்துக்கு எதிராக செயற்பட்டவர்களை ஒருபோதும் கட்சியில் இணைக்கப் போவதில்லை

எமது சமூகத்துக்கு எதிராக செயற்பட்டவர்களை ஒருபோதும் கட்சியில் இணைக்கப் போவதில்லையென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து அனுராதபுரத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நமது வாக்குகளால் பாராளுமன்றத்துக்கு வந்த இஷாக் ரஹ்மான், எமது சமூகத்துக்கு எதிரான கோட்டாபாயவின் கொடூரச் செயல்களைக் கை கட்டிப் பார்த்து நின்றார். அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு இவர்கள் ஆதரவளித்ததால்தான், ராஜபக்ஷக்களின் கொடிய கரங்கள் மேலோங்கின.



அரசியலில் அவரை ஆதரிக்கவில்லை என்பதற்காக எமது சமூகத்தைப் பழிவாங்கினர். முஸ்லிம்களின் சொத்துக்களை அழித்தனர். வியாபார நிலையங்களுக்குத் தீ வைத்தனர். கொரோனா ஜனாஸாக்களை எரித்து சந்தோசம் அடைந்தவர்களுடனேயே, இஷாக் ரஹ்மான்இணைந்துள்ளார்.

இதனால்தான், எமது கட்சியின் மூன்று எம். பிக்களையும் நீக்கினோம். இவர்களை ஒருபோதும் இணைக்கப் போவதில்லை. எனவே, இவர்களைத் தோற்கடிக்க ஒன்றுபடுங்கள்.



நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாச, தனது தந்தையைப் போன்று நேர்மையானவர். ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவி, இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்கினார். ஜனசவியத் திட்டத்தின் மூலம் ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வளித்தார். எனவே, சஜித்தின் வெற்றிக்கு உறுதுணையாகச் செயற்படுங்கள் என அவர் தெரிவித்தார்.

# இலங்கை கால்பந்து அணி முன்னேற்றம்



ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டியில் கம்போடிய அணியை 4–2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த இலங்கை கால்பந்து அணி உலக கால்பந்து தரவரிசையில் 200 அணிகளுக்குள் முன்னேற்றம் கண்டுள்ளது.

கம்போடியாவுக்கு எதிரான இரண்டு சுற்றுப் போட்டிகளில் முதல் போட்டியை சமன் செய்த இலங்கை அணி 205 ஆவது இடத்தில் இருந்து 203 ஆவது இடத்திற்கு முன்னேறிய நிலையில் இரண்டாவது போட்டியில் வென்றதை அடுத்து 199 ஆவது இடத்திற்கு ஏற்றம் கண்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு தரவரிசையில் 122 ஆவது இடத்தில் இருந்த இலங்கை அணி 2022 ஆம் ஆண்டாகும்போது 207 ஆவது இடம் வரை பின்தள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வரும் நியூசிலாந்தின் ஆப்கான் டெஸ்ட் கைவிடப்பட்டது

## ஐந்து நாட்களிலும் ஒரு பந்துகூட வீசவில்லை

இலங்கை சுற்றுப்பயணத்திற்கு முன்னர் இந்தியாவில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஆடவிருந்த நியூசிலாந்து அணியின் ஒரே ஒரு டெஸ்ட் போட்டி ஐந்து நாளும் தொடர்ந்து பெய்த மழையால் ஒரு பந்து கூட வீசப்படாது கைவிடப்பட்டது.

டெஸ்ட் வரலாற்றில் ஒரு பந்து கூட வீசப்படாது போட்டி ஒன்று கைவிடப்படுவது இது எட்டாவது முறையாக இருந்தது.

டெல்லி புறநகரில் உள்ள நெய்டா விளையாட்டு வளாகத்தில் பங்களாதேஷின் சொந்த மைதானமான நடத்தப்பட்ட இந்தப் போட்டியின் கடைசி நாளான நேற்றைய தினத்திலும் மழை இடையூறு செய்ததால் நாணய சுழற்சி கூட போடப்படாமல் இந்த ஆட்டம் கைவிடப்பட்டது.

எனினும் போட்டியை நடத்தும் மைதானம் தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. முதல் முறை டெஸ்ட் போட்டி ஒன்றை நடத்திய இந்த மைதானத்தில் நீரை வெளியேற்றுவதற்கான சாதாரண வடிகால் அமைப்பு ஒன்றே உள்ளது.



போட்டியின் முதல் இரு நாட்களிலும் சற்றி மழையற்ற காலநிலை இருந்தபோதும் மைதானம் ஈரலிப்பாக இருந்ததோடு அதனை போக்குவதற்கு சாதாரண மின் விசிறிகளையும் மைதானப் பணியாளர்கள் பயன்படுத்தி இருந்தனர். பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக ஆப்கானிஸ்தானால் தனது சொந்த மண்ணில் போட்டியை நடத்த முடியாத நிலை உள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்து அணி அடுத்து இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# கிழக்கில் களுதாவளை வித்தியாலயம் முதலிடம்



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் களுதாவளை மத்திய மகா வித்தியாலயம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை வென்றதோடு அந்தப் பாடசாலை மாணவர்கள் அதிகபட்சமாக 12 தங்கப் பதக்கங்களை வென்றனர்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடந்த இந்த விளையாட்டுப் போட்டியில் களுதாவளை வித்தியாலயம் 12 தங்கப் பதக்கங்களுடன் மொத்த 26 பதக்கங்களை வென்றது. இதன்போது அந்தப் பாடசாலை மாணவர்கள் 6 போட்டிச் சாதனைகளைப் படைத்ததோடு 31 பேர் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகினர். களுதாவளை வித்தியாலயம் மொத்தம் 95 புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்தது.

# சம்பியனானது ஆளுமு அணி

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



கட்டுகெலியாவ கே.கே.எஸ்.ஓ1 விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் மடாடுகம ஆளுமு விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

பதினாறு அணிகளின் பங்கேற்புடன் அண்மையில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் கெகிராவ ஒரியன்ஸ் அணியை எதிர்கொண்ட ஆளுமு அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இதில் தொடர் நாயகனாகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் மடாடுகம ஆளுமு அணியின் சபீக் தெரிவு செய்யப்பட்டதுடன், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக மடாடுகம ஆளுமு அணியின் ருஹைல் தெரிவானார்.

# சர்வதேச செய்திகள்

## உலகெங்கும் 9 நாட்கள் அதிர்ந்த பாரிய சுனாமி



பாரிய நிலச்சரிவு ஒன்றினால் கிரீன்லாந்தின் குறுகலான கடல் பகுதியில் ஏற்பட்ட சுனாமி அலை பூமியில் ஒன்பது நாட்கள் அதிர்வை ஏற்படுத்தி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பரில் பதிவான நில அதிர்வு சமிக்ஞை ஒன்று உலகெங்கும் இருக்கும் சென்சார் கருவிகளில் அவதானிக்கப்பட்ட நிலையில் அது எங்கிருந்து வருகிறது என்று விஞ்ஞானிகள் ஆய்வு செய்தபோதே இதனை கண்டறிந்துள்ளனர்.

கிரீன்லாந்தில் இருக்கும் மலை ஒன்றில் பனிப்பாறை சரிந்து 200 மீற்றர் உயரத்துக்கு அலை ஒன்று ஏற்பட்டுள்ளது. அந்த அலை குறுகலான கடல் வழியாக நகர்ந்து உலகெங்கும் ஒன்பது நாட்களுக்கு அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக இவ்வாறான நிலச்சரிவுகள் அடிக்கடி இடம்பெறுவதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். பனிப்பாறைகளுக்கு ஆதாரமாக உள்ள கிரீன்லாந்து மலைகள் உருகி வருவதே இதற்குக் காரணமாகும்.

இந்த நிகழ்வு குறித்த ஆய்வு முடிவு 'ஜேர்னல் சயன்ஸ்' சஞ்சிகையில் வெளியாகியுள்ளது. சர்வதேச விஞ்ஞானிகள் குழு ஒன்றுடன் டென்மார்க் கடற்படை இந்த ஆய்வில் பங்கேற்றுள்ளது.

## மேற்கத்திய நாடுகளுக்கு புட்டின் 'போர்' எச்சரிக்கை




தொலைதூர ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனை அனுமதித்தால் அது ரஷ்யாவுடன் மேற்கத்திய நாடுகள் நேரடியாகப் போரிடுவதற்குச் சமமாகும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் போரின் தன்மை மாறிவிடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

மேற்கத்திய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட ஏவுகணைகளை ரஷ்யாவுக்கு எதிராகப் பயன்படுத்த அனுமதி வழங்கும்படி கூட்டணி நாடுகளிடம் உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமியர் செலென்ஸ்கி கடந்த பல மாதங்களாக மன்றாடி வருகிறார்.

மேற்கத்திய நாடுகள் அனுப்பிவைத்துள்ள ஏவுகணைகளை இயக்கும் ஆற்றல் உக்ரைனுக்கு இல்லை என்றும் நேட்டோ உதவி செய்தால் மட்டுமே உக்ரைனால் அவற்றைப் பயன்படுத்த முடியும் என்றும் புட்டின் கூறினார் ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகளின் ஏவுகணைகளைப் பாய்ச்ச உக்ரைனுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உதவினால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று புட்டின் தெரிவித்தார்.

ஆனால் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவிக்கவில்லை. எனினும் ரஷ்யாவுக்கு எதிராக மேற்கத்திய நாடுகள் செயல்பட்டால், வெளிநாடுகளில் அவற்றுக்குச் சொந்தமான படைகள், உடைமைகள் ஆகியவை மீது தாக்குதல் நடத்த மேற்கத்திய நாடுகளின் எதிரிப் படைகளுக்கு ரஷ்ய ஆயுதங்கள் அனுப்பிவைக்கக்கூடும் என்று ஜனாதிபதி புட்டின் முன்னர் தெரிவித்திருந்தார்.

மேலும் அமெரிக்காவையும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகளையும் எட்டக்கூடிய ஏவுகணைகளைத் தயார்நிலையில் வைப்பது குறித்தும் ஜுன் மாதத்தில் அவர் பேசினார்.

2022ஆம் ஆண்டில் உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா படையெடுத்ததை அடுத்து, பனிப்போர் காலகட்டத்துக்குப் பின்னர் மேற்கத்திய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவு பொருமளவில் கசிந்துள்ளது.

## சீன இராணுவ விமானம் தாய்வானில் அத்துமீறல்



சீனாவின் இராணுவ விமானமொன்று தங்கள் நாட்டின் வான் பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாக தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் விளைவாக தங்கள் பாதுகாப்பு தரப்பினர் உடனடியாகச் செயற்பட்டதைத் தொடர்ந்து அந்த விமானம் தாய்வான் வான் பரப்பை விட்டு விலகிச் சென்றதாகவும் அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தெர்டர்பில் தாய்வான் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், சீனாவின் இராணுவ விமானங்கள் எமது வான் பரப்புக்குள் அத்துமீறி பிரவேசிப்பதும் வான் பரப்பை ஊடறுத்து செல்வதும் எமது இறையாண்மைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும். இவை எமது இறைமையை மீறும் செயற்பாடுகளும் கூட. இச் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அடிக்கடி இடம்பெறுகின்றன என்று குறிப்பிட்டுள்ளது.

## ஹிஸ்புல்லாவுக்கு சின்வார் நன்றி



காசா போர் தொடரும் நிலையில் தமது ஆதரவுக்காக ஹமாஸ் அமைப்பின் புதிய தலைவர் யெஹ்யா சின்வார், லெபனானின் ஹிஸ்புல்லா தலைவர் செய்யிது ஹசன் நஸ்ரல்லாவுக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்டில் ஹமாஸ் தலைவராக சின்வார் நியமிக்கப்பட்ட பின்னர் அவர் வெளியிடும் முதல் அறிவிப்பாக இது உள்ளது என்று ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளது.

ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது கிட்டத்தட்ட தினசரி தாக்குதல்களை நடத்தி வருவதோடு காசா போருக்கு இணையாக இந்த மோதல் நீடித்து வருகிறது. பலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவே இந்தத் தாக்குதல்களை நடத்துவதாக ஹிஸ்புல்லா கூறுகிறது.

'உங்களது ஆதரவான நடவடிக்கைகள் எதிர்ப்பின் அச்சு முனைகளின் ஒற்றுமை மற்றும் போரில் ஈடுபடுவதற்கான உங்களின் ஆதரவை வெளிப்படுத்துவதாக உள்ளது' என்று சின்வார் குறிப்பிட்டதாக ஹிஸ்புல்லாவின் அல் மனார் ஒளிபரப்பு நிறுவனம் தெரிவித்தது.

'எதிர்ப்பின் அச்சு என்று அழைக்கப்படும் ஈரான் ஆதரவு குழுக்களின் கூட்டணி ஒன்றில் அதிக பலம்மிக்க குழுவாக ஹிஸ்புல்லா உள்ளது. தவிர பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக யெமன் மற்றும் ஈராக்கில் உள்ள ஈரான் ஆதரவு தரப்புகளும் இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

லெபனான் ஹிஸ்புல்லா எல்லையில் நீடிக்கும் மோதல்கள் காரணமாக இரு பகுதிகளின் எல்லைகளிலும் இருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த மோதல் ஒரு முழு அளவிலான போராக வெடிக்கும் அச்சுறுத்தல் நீடித்து வருகிறது. இந்நிலையில் காசாவில் தனது திட்டத்தை பூர்த்தி செய்வதை நெருங்கி இருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் தெரிவித்துள்ளார். தொடர்ந்து லெபனான் பக்கம் அவதானத்தை அதிகரிக்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் ஒரு வருடத்தை நேரங்கும் காசா போரில் பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலியப் படையுடன் தொடர்ந்து சண்டையிட்டு வருதோடு இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் இடைவிடாது நீடித்து வருகிறது. மத்திய மற்றும் தெற்கு காசாவில் இஸ்ரேல் நேற்று (13) காலை நடத்திய செல் தாக்குதல்களில் ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ரபா நகரில் அல் மவாசி பகுதியில் உள்ள பர்த்வீல் குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட செல் தாக்குதலை தொடர்ந்து ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

நுஸைரத் அகதி முகாமில் அக்கல் குடும்பத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் ஒருவர் கொல்லப்பட்டு மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். காசாவில் கடந்த 11 மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41 ஆயிரத்தை தாண்டி இருப்பதோடு 95 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

காசா போரில் காயமடைந்தவர்களில் சுமார் 25 வீதமானவர்களான குறைந்தது 22,500 பேர் தமது வாழ்நாளை பாதிக்கும் காயத்துக்கு உள்ளாகி இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## இஸ்ரேலிய சிறப்புப் படையினர் சிரியாவில் தரையிறங்கி தாக்குதல்

சிரியாவில் உள்ள ஹிஸ்புல்ல ஏவுகணை உற்பத்தித் தளம் ஒன்றுக்குள் புகுந்து இஸ்ரேலிய சிறப்புப் படை தாக்குதல் நடத்தியுள்ள விபரம் வெளியாகியுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேலிய அரசு எந்தத் தகவலையும் வெளியிடாதபோதும் அண்மையில் இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்த விபரத்தை அமெரிக்க ஊடகம் வெளியிட்டுள்ளது.

லெபனானின் எல்லையில் இருந்து வடக்காக சுமார் 40 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மஸ்யாப் நகருக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டதாக சிரிய அரச ஊடகம் தெரிவித்தது.

இது தொடர்பில் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியில், ஹெலிகொப்டர்களில் வந்து இறங்கிய சிரிய சிறப்புப் படையினர் ஈரானினால் கட்டப்பட்ட தளத்தை குண்டு வைத்து தகர்த்ததாகவும் அங்கிருந்த முக்கிய தகவல்களை எடுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் மற்ற அதிகாரிகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த செய்தி வெளியாகியுள்ளது. சிரிய பாதுகாப்புப் படைகளை கட்டுப்படுத்துவதற்கு குறித்த தளத்திற்கு படையினர் குவிக்கப்படுவதை தடுக்கவே இஸ்ரேல் அங்கு வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

சிரியாவில் இஸ்ரேல் அடிக்கடி வான் தாக்குதல்களை நடத்துகின்றபோதும் அங்கு துருப்புகள் தரையிறங்கி தாக்குதல் நடத்துவது வழக்கத்திற்கு மாறானதாகும்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 14ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.